DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777
ignite

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1385 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 21, 2022

# 16th Annual Uthayan International Awards Festival, a successful event held on 15th of October in Scarborough

# கனடா உதயன் சர்வதேச விருது விழா-2022 வெற்றிகரமாக நடைபெற்றது




கடந்த 15-10-2022 சனிக்கிழமையன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் ஒன்பது வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன .

இங்கே காணப்படும் படங்களில் அங்கு கலந்து சிறப்பித்த அரசியல் பிரமுகர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்று கௌரவிக்கப்பெறுவதையும் விருதுகள் பெற்ற ஏழு வெற்றியாளர்கள் ஒன்றாக விருது விழா நிறுவனர் லோகேந்திரலிங்கம் அவர்கள் நிற்பதையும் காணலாம். (உள்ளே விபரமான செய்தியும் படங்களும்)

## இன்று வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள ‘பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்’ நூல் வெளியீட்டு விழா




இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்காபுறோவில் 733 **Birshmount Road** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள ‘பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்’ நூல் வெளியீட்டு விழாவிற்கு அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.

உதயன் சர்வதேச விருது விழா-2022 இல் வாழ் நாள் சாதனையாளர் விருது பெற்ற தமிழ்நாட்டின் பேச்சாளர் வேலாயுதம் சங்கரநாராயணன் அவர்கள் எழுதிய இந்த நூல் வெளியீட்டு விழா கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றது.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE & FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வேலை வாய்ப்பு

**McCowan//Lawrence** பகுதியில் வசிக்கும் 4 வயது-டைய பள்ளிச் சிறுவனை காரில் **school drop off and pick up** செய்ய, முன் அனுபவம் உள்ள பெண் வாகனத்துடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**(647) 572-2345**

## குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை. அனுபவம் விரும்பத்தக்கது.
சம்பளம் - $18/hr

தொடர்புகளுக்கு:- 416 844 4207
அல்லது 416 510 8727

## வேலைக்கு ஆட்கள் தேவை

Markham நகரில் Woodbine & 14th Ave. சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு kitchen helper மற்றும் dish washer, part-time line cook & South Indian cooks உடனடியாக தேவை. Female cook also needed.

Call Amar:
(416) 988-9518

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Downtown Toronto** ல் **John and Adelaide** சந்திப்பில் அமைந்துள்ள **Fox on John Restaurant க்கு Line cooks உடனடியாக தேவை.**
**$20/hr + Tips**
**Full Time.**
**Parking Available.**
**தொடர்புகளுக்கு:**
**647-494-5592**

## வேலை வாய்ப்பு

**Bathurst and Hwy 7**
பகுதியில்
மாலை நேரம் 3-11
(7 நாட்களும்)
இரவு 11-7 **midnight**
வேலைகளுக்கு ஆடகள் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**சங்கர் 416-305-0264**

## Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**


STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)





JOE LI
Re-Eelect
Regional Councillor

Vote:
October
14-24, 2022

நிதிப் பொறுப்பு மற்றும் ஒற்றுமையுடன் சமூகத்திற்கு சேவை செய்தல்

இவரது கடந்த கால முக்கிய சாதனைகள்:



தொடர்ந்து 19 ஆண்டுகளாக மார்க்கம் நகரசபையின் விருப்ப வரவு செலவுத் திட்டத்தில் நிதிப் பொறுப்பு- பூச்சியம் டாலர்கள் செலவிடப்பட்டது. 100,000 டாலர்களுக்கு மேல் வரி செலுத்துவோரின் நிதி சேமிக்கப்பட்டது



மார்க்கம் நகர சபைக்கு உட்பட்ட பகுதியில், தானியங்கி கழிவு சேகரிப்பு அமைப்பை ஏற்று சபையின் ஒப்புதலைப் பெற்றமை



யோர்க் பிராந்திய போக்குவரத்து நிறுவனத்தின் பேருந்து தங்குமிடங்களில் புதிய போக்குவரத்து நேர திறன் அமைப்பை உருவாக்குவதற்கு ஜோ லீ அவர்கள் தலைமை தாங்கினார்




யோர்க் பிராந்திய குடிமக்கள் தங்கள் பிராந்தியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரேரணையை இவரே முன்வைத்தார்.

2022-2026க்கான ஜோ லியின் பார்வை



சொத்து வரிகளை குறைவாக வைத்திருத்தல் மற்றும் நகர சபையின் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்துதல்



லாங்ஸ்டா:ப் மற்றும் மார்க்கம் மேம்பாட்டு மையங்களில் தானியங்கி கழிவு சேகரிப்பு முறையை செயல்படுத்துதல்



அனைத்து மலிவு மற்றும் வாடகை வீட்டுத் திட்டங்களை விரைவாகக் கண்காணிக்கும் திட்டத்தை உருவாக்குதல்




சமூக பாதுகாப்பு முன் முயற்சிகளுக்கான ஆதாரங்களை வழங்குதல்



தேர்ந்தெடுக்கப்பட்ட யோர்க் பிராந்தியத் தலைவருக்கான ஜனநாயக செயல்முறையை மீண்டும் நிறுவுதல்

Campaign Office: 165 Gibson Dr, Markham L3R-3K7
Tel: (647) 479-8738 Website: www.joeli.ca
Email: reelectjoeli@gmail.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# நரியை ஒத்த ரணில், எலியை ஒத்த எறிக் சொல்கைம்: இருவரும் சேர்ந்ததனால் தமிழர்களுக்கு இனிமேல் இருண்ட காலம் ஆரம்பிக்கின்றது

நோர்வே நாட்டின் இராஜதந்திரி என்ற வகையில் பல ஆண்டுகளுக்கு முன்னர், வன்னியில் விடுதலைப் புலிகள் அதிக பலத்துடன் விளங்கிய காலப்பகுதியில் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று இலங்கைக்குள் புகுந்த எறிக் சொல்கையும் அவர்கள் இறுதியில் என்ன செய்தார் என்பதை எமது கடந்த காலங்களில் அரசியல் தேடல் கொண்டவர்கள் எளிதில் விளங்கிக் கொண்டார்கள்.
இறுதியில் எறிக் சொல்கையும் அவர்கள் விடுதலைப் புலிகளை அழிப்பேன் என்று கர்ச்சித்மை மனதை மீண்டும் வாட்டத் தொடங்கியுள்ளது.

ஏறிக் சொல்கைம் அவர்கள் இலங்கைக்கு புதியவர் அல்ல என்பது எம் அனைவருக்கும் தெரியும்."சமாதானப் பொறியுடன்" அன்று வந்த எரிக்சொல்ஹெம் இன்று மீண்டும் இலங்கையில் "கால நிலைப்" பொ-றியாக வந்திறங்கியுள்ளார். அன்று ஆட்சியில் எதிரெதிர் அணியில் நின்ற தென்னிலங்கையின் அரசியல் கதாநாயகர்களான ரணில்விக்ரமசிங்கவும் - மஹிந்தராஜபக்'வும் இன்று அரசியலில் ஓரணியில் நிற்கின்றனர். ஒரு "தோற்றுப்போன" அரசை வைத்துக் கொண்டு நாட்டை நடத்த முடியாத நிலையில் உலக நாடுகளிடம் கையேந்தி நிற்கும் அரசியல் கூட்டாளிகளுக்கு "காலநிலை ஆலோசகர்" தேவையா என்ற கேள்வி எழும்புகின்றது.
யார் இந்த எரிக்சொல்ஹெம்? எவருடைய நலன்களுக்காக இவர் பணியாற்ற வந்துள்ளார் என்பதை பிரபல ஊடகவியலாளரான தராக்கி சிவராம் 2005 ஆம் ஆண்டு அவர் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் எழுதிய தனது பத்தியில் "சமாதானப் பேச்சுவார்த்தைக்கென எரிக்சொல்ஹெம் அடிக்கடி இலங்கை வந்து போவது என்பது சிங்களப் பேரினவாதிகளின் நலன்களுக்கு சேவை செய்வதாகவும் பங்களிப்பதாகவுமே அமைந்துள்ளது. எரிக்சொல்ஹெமின் ஒவ்வொரு இலங்கை வருகையின்போதும் இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள எந்த ஒரு விடயத்தையும் எமக்கு ஒருபோதும் வழங்காது என்ற உண்மையை நாம் எமது வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டும்" என குறிப்பிட்டிருந்தார்.

தராக்கி சிவராமின் கூற்றுக்கு தமிழ் மக்கள் இன்றும் சாட்சி.
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச தரப்பான மஹிந்த ராஜபக்' தரப்புடன் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை முறிவடைந்தது.இந்தப் பேச்சுவார்த்தையின்போது இலங்கைத்தரப்பு அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானித்துக் கொள்ள கோரினர்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையின் போது அரசியல்விடயம் குறித்து பேசுவதாயின் இப்பொழுது மக்களின் வாழ்வாதாரம் குறித்துப் பேசவேண்டும் எனக் கோரினர். ஆனால் இலங்கைத்தரப்பு அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானிப்பதிலேயே விடாப்பிடியாக நின்றனர்.இறுதியில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.
இவ்வாறன தமிழர் எதிர்ப்புத்தன்மை கொண்ட இந்த அரசாங்கம் மீணடும் தமிழர்களை வாட்டி வதக்கும் நோக்கத்துடனேயே இவ்வாறான நகர்வுகளை மேற்கொள்கின்றது என்று நாம் அனைவரும் நன்கு அறிவோம்.




# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 22வது நினைவேந்தல் மட்டக்களப்பில் இடம்பெற்றது





யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 22 வது நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் இன்று புதன்கிழமை (19) ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர் .
மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் பா.கிரு'ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியேந்திரன்,மட்டக்களப்பு மாந-கரசபை முதல்வர் ரி.சரவணபவான், பல் சமயத் தலைவர் வணபிதா , மற்றும் மனிதநேய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட ம.நிமலராஜன் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

# கனடாவில் வலிகிழக்கு பிரதேசசபை தலைவர் திரு நிரோஸ் தியாகராஜாவுடனான சந்திப்பு

அன்பான நவக்கிரி மக்களுக்கு,
வலிகிழக்கு பிரதேசசபை தலைவர் திரு நிரோஷ் தியாகராஜா உடனான ஓர் கலந்துரையாடலை ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த கலந்துரையாடலின் போது எமது ஊரின் மேம்பாடு பற்றியும், புலம்பெயர்ந்து வாழும் நாம் எவ்வகையான பணியாற்றலாம் என்பவற்றைப் பற்றியும் கலந்துரையாட உத்தேசிக்கப்படுள்ளது. அனைத்து நவக்கிரி ஊர் மக்களும் கலந்து உரையாடி இந்நிகழ்வை சிறப்பிக்கவும். அயல் ஊரவர்கள் விரும்பினால் அவர்களையும்அழைத்து வரவும்.



இடம்: **Scarborough Event Centre**
**5637 Finch Ave East, Scarborough ON, M1B 5R1.**
காலம்: **October 23rd, 2022, between 3:00 pm to 5:00 pm.**
மேலதிக தொடர்புகளுக்கு: 416-319-3139, 647-818-6750, 647-717-6977.
நன்றி, நிர்வாகசபை சார்பாக,
நா. பாஸ்கரன், தலைவர்
சி. பானுகோபன், செயலாளர்
பொ. உமாதேவி, பொருளாளர்

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




## யாழ். நகரில் Hotel விற்பனைக்குண்டு

யாழ். நகரில் SKY LIGHT QUEST Inn Hotel விற்பனைக்குண்டு

3 Triple rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (AC, TV, attached bathroom)
3 Double rooms (attached bathroom )
3 Single rooms (attached bathroom )
3 Single rooms (outside bathroom)
2 Double rooms (with kitchen, hall and bathroom)

7 வருடங்கள், யாழ். நகரில் இருந்து 1Km தூரத்தில் பலாலி வீதியில், இல. 1, 2nd Lane, Palaly Road, Jaffna வில் போதிய வருமானத்துடன் நல்ல பராமரிப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கும் Hotel விற்பனைக்குண்டு.

Google இல் சென்று SKY LIGHT Quest Inn, Jaffna என்று பார்வையிடுவதன் மூலம் எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை 7,50,000$ (கனடிய டொலரில்)

மேலதிக விபரங்களிற்கு 94 77 059 6776

94 76 022 6746 இல் whatsapp ல் தொடர்பில் கொள்ளலாம்.

## Important Message for all Sri Lankan Pensioners

The Annual General Meeting of the Ontario Sri Lankan Pensioners Association will be held on Saturday 29th of October 2022 from 9am at Council Chambers, Scarborough Civic Centre, 150 Borough Drive, Scarborough ON M1P 4N7.

1) The Meeting will be held at the Council Chambers of the Scarborough Civic Centre.
2) The Consul General of Sri Lanka in Toronto will be the Chief Guest at this function.
3) All Sri Lankan Pensioners whether members or non- members are Invited.
4) Lunch and Refreshments will be served at this Function.
5) Methods of Withdrawal of Funds from Canada from the Pensions Account will be Favourably discussed.
6) All Pensioners, please inform your Presence and also whether non Vegetarian or Vegetarian Lunch preferred to any one of the following Office Bearers:

Mr. Maya Kandiah
Email: mayakandiah@yahoo.ca
Tel: (416) 895-8111

Mr. Sundar Rajalingam
Email: sundar114@gmail.com
Tel: (416) 454-6360

Mr. N. Sathananthan
Email: satha41@gmail.com
Tel: (416) 908-1156

Mr. A. Kaneshalingam
Email: kanesh1946@gmail.com
Tel: (437) 778-1904

7) Any Outstanding Problem, please come with a letter with details.
8) Please inform your friends, contacts and other Sri Lankan Pensioners.
9) No individual Invitations will be sent.

Please Come, Meet, Greet and Enjoy before the Cold Winter Prevents You.
Mr. Sundar Rajalingam will Email those who have Email facility.

Thank you,

R. Ragupathy, Hon.Secretary, OSPA
ragucanada@gmail.com
Tel: (437) 779-5995

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நானாட்டான் பிரதேச சபையினால் சேதனைப் பசளை தயாரிக்கும் பொறிமுறை ஆரயம்பித்து வைப்பு



நானாட்டான் பிரதேச சபை வளாகத்தில் சேதனைப் பசளை தயாரிக்கும் பொறிமுறையை நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி உத்தியோக பூர்வமாக செவ்வாய்க்கிழமை மதியம் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சபை உறுப்பினர்கள் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இதன் மூலம் உள்ளூர் விவசாயிகளுக்குத் தேவையான சேதனைப் பசளை வழங்க முடியும் என்பதுடன் இந்த திட்டத்தை விஸ்தரிப்பதற்கு திட்ட முன்மொழிவானது வழங்கப்பட்டுள்ளது என்று நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்

## மன்னார் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார்





பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.எனவே நாம் முயற்சி உள்ளவர்களாய் எமது சோர்வுகளை களைந்து விட்டு, உழைக்கும் மக்களாக மாற வேண்டும். என மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தெரிவித்தார்.

கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் சர்வமத செயல் திட்டத்தின் ஊடாக பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட இலக்கு கிராம மக்களுக்கு செயல் நோக்கு செயலமர்வு புதன்கிழமை (18) மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தில் இடம் பெற்றது.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனவே நாம் முயற்சி உள்ளவர்களாய் எமது சோர்வுகளை கலைந்து விட்டு, உழைக்கும் மக்களாக மாற வேண்டும்.

குறிப்பாக இவ்வாறான நெருக்கடியான காலகட்டத்தில் எமது வீடுகளில் வீட்டுத்தோட்டத்தை உருவாக்கி எமக்கு தேவையாக மரக்கறி வகைகளை நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

இதனால் நஞ்சற்ற மரக்கறி வகைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் ஆரோக்கியமான, போசாக்கான உணவை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் எமக்கு ஏற்படும் செலவினங்களையும் நாம் குறைத்துக் கொள்ள முடியும். என அவர் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் வளவாளர்கள் கலந்து கொண்டதோடு, இளைஞர், யுவதிகள், வாழ்வுதய பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**




MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# சர்ச்சையில் சிக்கிய கோண்டாவில் துடுப்பாட்ட மைதானம்

**யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



அவுஸ்திரேலியாவில் டி 20 உலகக் கிண்ண துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. இதில் பங்கேற்கும் இலங்கை அணியில் தமிழர்கள் யாரும் இல்லை. இலங்கை அணி அந்த கிண்ணத்தை கைப்பற்றுமா அல்லது ரசிகர்களிற்கு ஏமாற்றமளிக்கும் வகையில் தோல்வியைத் தழுவுமா என்பதெல்லாம் அடுத்த சில நாட்களில் தெரியவரும்.

இலங்கையில் விளையாட்டு என்பது கொழும்பை மையப்படுத்தியதாகவும் சிங்கள மக்களிற்கான ஒன்றாகவுமே பார்க்கப்படுகிறது. பெரும்பாலான தேசிய அணிகளில் சிறுபான்மையினரின் பங்களிப்பு அல்லது அவர்களுக்கு இடமென்பது தற்போதுதான் எட்டிப் பார்க்கின்றது. 50 ஓவர்களைக் கொண்ட உலகக் கிண்ணத்தை ஒரு முறை இலங்கை வென்றிருந்தாலும், அந்த அணியில் தன்னை தமிழராக அடையாளப்படுத்த விரும்பாத முத்தையா முரளிதரனைத் தவிர தமிழர்கள் யாரும் இடம்பெறவில்லை.

அடிப்படையில் தேசிய அணிகளைத் தேர்வு செய்யும் போது, நாடு முழுவதும் தேர்வுகளை நடத்தி பக்கச்சார்ப்பற்ற முறையில் அறிவியல் ரீதியான வகையில் தெரிவை மேற்கொண்டு நாட்டிற்கு கீர்த்தியைத் தேடித் தரும் அணியை தேர்வு செய்வதே உலக நடைமுறை. இங்கிலாந்தின் தேசிய கால்பந்து அணியை இதற்கு மிகச்சிறந்த உதாரணமாகச் சொல்லலாம். அந்த அணியில் இடம்பிடிப்பது என்பது மிகவும் சவாலானது, அதே நேரம் திறமையிருந்தால் மட்டுமே சாத்தியமாகும். ஆனால் இதில் முக்கியமான ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். தேசிய அணிக்கு தேர்தெடுக்கப்படும் நபர் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும், எந்த இனத்திலிருந்தும், என்ன மொழி பேசுபவராக இருந்தாலும் அவருக்கு வாய்ப்பு கிட்டும்.

இதே நிலைதான் ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல், பிரேசில், இத்தாலி, கனடா போன்ற நாடுகளிலும், ஏன் இந்தியாவிலும் கூட பின்பற்றப்படுகிறது.




உதாரணமாக இந்திய துடுப்பாட்ட அணியில் தமிழ்நாட்டை சேர்ந்த பலர் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தனர். கிருஸ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் அணியின் தலைவராகக் கூட இருந்தார். தற்போது அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ரவிச்சந்திரன் அஷ்வின் மற்றும் தினேஷ் கார்த்திக் இடம்பெற்றுள்ளனர்.

ஆனால் இலங்கை அணியில் தமிழர்கள் கணிசமாக இடம்பெறுவதெல்லாம் சாத்தியமாகாது என்று உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை நான் அறிவேன். எனினும் அப்படியான ஒரு விஷயத்திற்கு ஒரு தொடக்கப்புள்ளி இருக்கத்தானே வேண்டும்.

இதன் காரணமாகவே வடக்கே யாழ்ப்பாணத்தில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் தேவை என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே எழுப்பப்பட்டது. அது ஓரளவு சித்தியாகக் கூடும் என்று கருதும் நிலையில் புதிய சர்ச்சை ஒன்று இப்போது எழுந்துள்ளது.

தற்சமயம் கோண்டாவிலில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் என்ற விடயம் பேசு பொருளாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒக்டோபர் மாத அமர்வு கடந்த 17ஆம் திகதி சபை மண்டபத்தில் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கோண்டாவிலில் தற்போது மாநகர சபையின் ஆளுகையில் உள்ள குடிநீர் விநியோக கிணறுகள் அமைந்துள்ள பகுதியில் உள்ள 11 ஏக்கர் காணியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்கும் யோசணை ஒன்று மாநகர முதல்வரால் முன் வைக்கப்பட்டது.

இதனை உறுப்பினர்கள் பலர் நிராகரித்து விட்டனர். இவ்வாறு நிராகரித்தமைக்கு இதன் பின்னால் உள்ள ஆபத்துக்களே காரணம் என அவர்கள் கூறுகின்றனர்.

இதேநேரம் இத்திட்டத்தை சபை ஏற்றுக்கொண்டால் சபை ரீதியிலான ஏனைய அனுமதிகள் பெறப்படும் அதேவேளை குடாநாட்டின் 25 ஆயிரம் இளைஞர்களின் துடுப்பாட்ட ஆசைக்கு ஓர் களமாகவும் நகரை மட்டுமன்றி புறநகர்ப் பகுதியும் மிகப் பெரும் அபிவிருத்தி காணும் என்பதுடன் மாநகர சபையின் வருமானமும் அதிகரிக்கும் என்பது முதல்வரின் கருத்தாக உள்ளது.

ஆனால் கோண்டாவிலில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அப்பகுதி விவசாயம் முழுமையாக அழிவடையும் என அப்பகுதி மக்கள் கோரியதன் பெயரிலேயே அத்திட்டத்தை நிராகரித்தோம் என திட்டத்தை எதிர்த்த தரப்புக்கள் கூறுகின்றனர்.



இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் இ.ஆனல்ட் கனடா உதயனிடம் கருத்து தெரிவிக்கையில், "இந்த யோசணையின் பின்னாலும் பல யோசணைகள் உள்ளன. அதாவது தீவகத்தில் சர்வதேச மைதானம் என அந்த மக்களிற்கு ஆசை காட்டிவிட்டு தற்போது அதனை கோண்டாவிலில் அமைத்தால் அந்த மக்களின் மனம் பாதிக்கப்படும் என்பது ஒரு விடயம். அதேநேரம் தீவுப் பகுதியிலே சர்வதேச மைதானம் அமைக்காமல் விடுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக கூறப்பட்டது சர்வதேச துடுப்பாட்ட மைதானம் ஒன்று அமைந்தால் அதற்கு சாதாரண நாட்களிலே 25 ஆயிரத்திற்கு குறையாத நீரும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும் நாட்களில் 40 ஆயிரம் லீற்றருக்கும் மேற்பட்ட நீரும் வேண்டும் அதனை பெறுவதில் உள்ள நெருக்கடியே பிரதானமானதாக காணப்பட்டது".

அதுமட்டுமின்றி தீவகத்தில் மைதானம் அமைக்கும்போது அதனை விளையாட்டு வலயத்திற்கு அருகிலுள்ள வயல் காணிகளையும் கோரியதும் நெருக்கடிக்கு காரணமாக அமைந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் தற்போது குடாநாட்டில் கோண்டாவில் பகுதியினையும் தாண்டி குடியிருப்பு நிலம் பரப்பு 50 லட்சத்தை தொட்டு நிற்கும் நிலையில் இவ்வாறான ஓர் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் வந்தால் அதனைச் சூழ மேலும் வர்த்தக மையங்களே எழுமே அன்றி குடியிருப்புச் சூழல் பாதிக்கப்படுவதோடு பாமர மக்கள் குடியிருக்க காணியை பெறும் சந்தர்ப்பமே அற்றுப்போகும் எனவும் மாநகர சபை உறுப்பினர் இ.ஆனல்ட் வலியுறுத்தினார்.

இதற்கும் அப்பால் மிக ஆபத்தான விடயமாக தறபோது கோண்டாவில், கோப்பாய், திருநெல்வேலிப் பகுதிகளே விவசாய நிலமாக இருக்கும் சூழலில் இந்த 3 கிராமங்களும் தோட்டச் செய்கையை மறக்கும் நிலையே ஏற்படும் எனவும் மாநகர சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவை மக்களின் பிரச்சணை எனில் மாநகர சபையின் நிர்வாக நெருக்கடிகளாக குறித்த நிலம் ஓர் பொதுப் பயன் பாட்டிற்காக இன்னுமோர் அரச திணைக்களத்தில் இருந்து பராதீனப்படுத்தல் சட்டம் மூலம் (வெஸ்ரிங் ஓடர்) மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட சொத்தாகும். இருப்பினும் அதன் தற்போதைய சந்தைப் பெறுமதி நூறு கோடி ரூபாவைத் தொட்டு நிற்கும்.

ஓர் அரச சொத்து பராதீனப்படுத்தல் சட்டம் மூலம் (வெஸ்ரிங் ஓடர்) வழங்கப்பட்டு அந்த தேவை அன்றி வேறு தேவைக்கு வழங்குவதானால் மாநகர சபை கட்டளைச் சட்டம் 40இன் பிரகாரம் ஜனாதிபதியின் அனுமதி பெறப்பட வேண்டும் என உள்ளது. இங்கே அந்த அனுமதி பெறப்படவும் இல்லை.

மேலும் ஒரு பிரச்சனையாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் முத்தரப்பு ஒப்பந்தம் எழுதி இந்திய அரசினால் அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்தும் தற்போது மாநகர சபையிடம் கையளித்தால் அதனை பராமரிக்கும் வல்லமை இல்லை என்னும் தொனியில் கையளிக்காது இழுத்தடிக்கப்படுவதோடு அதற்கு என்ன முடிவு என இதுவரை கண்டறியப்படவே இல்லை.

"இத்தனை பட்டறிவு, சட்ட ஏற்பாடு, எமது மக்களின் வாழ்வியல் என்பவற்றைக் கருத்தில்கொள்ளாது கோண்டாவில் நிலத்தை சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்கு வழங்கினால் மைதானம் அமைத்து முடிவுறும் தறுவாயில் அதனை பராமரிக்கும் வல்லமை யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கிடையாது எனவே அதனை துடுப்பாட்ட சபையிடம் கையளியுங்கள் என்றோ அல்லது சர்வதேச மைதானங்கள் அனைத்தும் மத்திய விளையாட்டு அமைச்சின் கீழ் என்றோ பறி போகாது எனபதற்கு என்ன உத்தரவாதம்? என்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வடகிலே யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இளைஞர்கள் துடுப்பாட்டத்தில் ஆர்வமாக உள்ள நிலையில் அங்கு சர்வதேச துடுப்பாட்ட மைதானம் ஒன்று வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.


அவ்வகையில் வடக்கை மையமாகவோ யாழ்ப்பாணம் எனில் தீவகம் அல்லது குடிசண நெருக்கடி அற்ற பிரதேசத்திற்கோ மைதானத்தை நகர்த்தி அங்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே பொருத்தமானதாக அமையும் என்ற நோக்கிலேயே கோண்டாவிலில் துடுப்பாட்ட மைதானம் வேண்டாம் எனக் கூறப்பட்டது.

இது ஒருபுறம் எனில் மறுபுறம் சபையின் 11 ஏக்கரில் மைதானம் அமைத்தால் அதற்கு அருகிலே இதற்கான வாகனத் தரிப்பிடங்களிற்குகூட போதுமான இடங்கள் இன்மையால் அதனை எவ்வாறு ஏற்படுத்துவது? இதற்கான இதர கட்டுமானங்கள் என எழும்போது கண்டிப்பாக அயலில் உள்ள விவசாய நிலங்கள் அல்லது குடியிருப்பு நிலங்கள் பாதிப்படையும் என்பதும் திண்ணம்.

வடக்கின் மையப் பகுதியான மாங்குளம் பகுதியில் ஓர் சர்வதேச துடுப்பாட்டு மைதானத்தை தாருங்கள் என நீண்ட காலமாக கோரிக்கை விடும் முல்லைத்தீவு கிளிநொச்சி மக்களின் எதிர்பார்ப்பை பாதிக்கும் வகையில் எமது தீர்மானம் அமைந்து விடக்கூடாது என்பதற்காகவுமே நாம் கோண்டாவிலில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் வேண்டாம் என்று கூறுகின்றோமே அன்றி துடுப்பாட்ட மைதானம் வேண்டாம் என தமிழ் தேசியக் கூடமைப்பு சார்பில் எவருமே தடுக்கவில்லை என்று அக்கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றனர்.

இவை இவ்வாறிருக்க இலங்கையில் துடுப்பாட்டத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஏன் இதர விளையாட்டுகிளிற்கு அளிக்கப்படுவதில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

தீவு நாடான இலங்கையில் கணிசமான அளவிற்கு கடலோரப் பிரதேசங்களில் மக்கள் வாழ்கின்றனர். அதிலும் குறிப்பாக அன்றாடம் கடலுடன் தொடர்புடைய ஆயிரக்கணக்கான மக்களுக்கு நீச்சல் மற்றும் நீர்விளையாட்டுகள் கைவந்த கலையாக உள்ள நிலையில், ஏன் நீச்சல், வாட்டர் போலோ, நீரில் பாய்தல் (டைவிங்), போன்ற விளையாட்டுகளையும், வீரமறவர்களான தமிழர்களுக்கு இயல்பாகவே வரக்கூடிய குதிரையேற்றம், வாள் சண்டை போன்ற விளையாட்டுகளையும் ஏன் அரசு முன்னெடுக்க கூடாது என்ற கேள்வி நியாயமானதாக இருந்தாலும், பதில் வராது என்பதே யதார்த்தம்.



# 16th Annual Uthayan International Awards Festival, a successful event held on 15th of October, in Scarborough.

# கனடா உதயன் சர்வதேச விருது விழா – 2022 வெற்றிகரமாக நடைபெற்று அனைவரையும் கவர்ந்ததாக விளங்கியது

























கடந்த 15-10-2022 சனிக்கிழமையன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் ஒன்பது வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றும் சிறப்பான உரைகள் சபையோரைக் கவர்ந்தும் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாக அமைந்த நடனங்கள் பாடல்கள் மற்றும் வீனா கானம் இசை நிகழ்ச்சிகள் சபையோரால் பாராட்டுக்கள் பெற்றும் சுவையான இராப்போசன விருந்தோடு நிறைவுற்றும் கொண்டாடப்பெற்றமை இன்று வரை ரொறன்ரோ மாநகரில் மாத்திரமன்றி. தமிழ் மக்கள் வாழும் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் பேசப்பெறும் பெருவிழாவாக திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

கடந்த 15ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் அமைந்துள்ள கென்னடி கொன்வென்சன் விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் அரசியல் தலைவர் மதத் தலைவர்கள் வர்த்தகப் பெருமக்கள் மற்றும் கலை இலக்கிய நண்பர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வழங்கப்பெற்ற ஒன்பது விருதுகளைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

உதயன் தலைமைத்துவ விருது: பாஸ்டர் எஸ். ஜெயானந்தசோதி அவர்கள்
உதயன் கலை இலக்கிய மேன்மை விருது: "சிந்தனைப் பூக்கள்" எஸ். பத்மநாதன் அவர்கள்
உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது (ஒன்றாரியோ): கிருஸ்ணகோபால் செல்லத்துரை அவர்கள்
உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது (கியுபெக்): குமரேசன் முத்துக்கிருஸ்ணன் அவர்கள்
உதயன் இளையோருக்கான அடையாள விருது: மெலனி சுரேஸ்குமார் அவர்கள்
உதயன் பல்லின உறவுகளுக்கான மேன்மை விருது: மரியா சாரஸ் அவர்கள்
உதயன் வாழ் நாள் சாதனையாளர் விருது (தமிழ்நாடு): பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் அவர்கள்
உதயன் வாழ் நாள் சாதனையாளர் விருது (இலங்கை): சிவஸ்ரீ சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள்
உதயன் சிறப்பு விருது (இலங்கை): நிரோஸ் தியாகராஜா அவர்கள்

பார்வையாளர்களும் பங்கேற்பாளர்களும் விருது பெற்றவர்களுமாக 500 இற்கும் அதிகமானர்கள் கலந்து கொண்ட இந்த அற்புதமான விழா அனைவரையும் பரவசப்படுத்தியது என்றால் மிகையாகாது.

நிகழ்ச்சிகள் வர்த்தகப் பிரமுகர் திரு. கென் கிருபா அழகாக தொகுத்து வழங்கினார். இறுதியாக இடம்பெற்ற வீணா கானத்தை மொன்றியால் அறிவிப்பாளர் அர்ஜீன் தொகுத்து வழங்கினார்.

# வெல்ல முடியாத ஒரு யுத்தத்தை நடாத்தும் உக்ரைன் சனாதிபதி செலன்ஸ்கி

-கனடா நக்கீரன்

*புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட*
*போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்*

என சென்ற நூற்றாண்டில் கொடிய போர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஆனால் கெட்ட போரினை முற்றாக ஒழிக்க யாராலும் முடியவில்லை. முதலாவது உலக யுத்தம் யூலை 28, 2014 அன்று தொடங்கி நொவெம்பர் 11 1918 வரை நான்கு ஆண்டுகள் நீடித்தது. இரண்டாவது உலக யுத்தம் 1939 இல் தொடங்கி 1945 இல் முடிவுற்றது. முதலாவது உலக யுத்தத்துக்கும் இரண்டாவது உலக யுத்தத்துக்கும் இடையில் உள்ள இடைவெளி 21 ஆண்டுகள். ஆணால் இரண்டாவது உலக யுத்தம் முடிந்து 77 ஆண்டுகள் கடந்தும் 3 ஆவது உலக யுத்தம் தொடங்கவில்லை. இதற்கு இரண்டாவது உலகப் போர் முடிந்த கையோடு அமெரிக்கா முன்னெடுத்த முயற்சி காரணமாக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைதான் காரணம். நாடுகள் தங்களுக்குள் எழும் முரண்பாடுகளை பேசித் தீர்வுகாண முயற்சித்துள்ளன.

இப்படிக் கூறுவதால் போர் வேரோடு கெல்லி எறியப்பட்டுவிட்டது என்பது பொருள் அல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நாடுகளுக்கு இடையே சண்டை நடந்துள்ளன. நடந்த வண்ணம் உள்ளன.

1945 க்குப் பின்னர் அமெரிக்கா கொரியா, வியட்நாம், வளைகுடாப் போர், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய ஐந்து முக்கியப் போர்களை நடத்தியது, இவற்றில் 1991 இல் நடந்த வளைகுடாப் போரை மட்டுமே உண்மையில் தெளிவான வெற்றியாக வகைப்படுத்த முடியும். வியட்நாம் மற்றும் ஆப்கானிஸ்தான் போரில் அமெரிக்கா படு தோல்வி அடைந்தது.




இப்போது உருசியா - உக்ரைன் இடையிலான போர் அந்த நாடுகளுக்கு இடையில் மட்டுமல்ல அதற்கும் அப்பால் உலகளாவிய தாக்கத்தை உண்டாக்கி வருகிறது. பல நாடுகள், குறிப்பாக ஆபிரிக்க நாடுகள், தானியக் பற்றாக் குறை, விலைவாசி உயர்வு, பண வீக்கம் போன்ற பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றன. சோமாலியாவில் வரலாறு காணாத உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து அந்த நாடு மீள அ.டொலர் 1.1 பில்லியன் அவசரமாகத் தேவை என அய்க்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குத்தேரசு உலக நாடுகளிடம் உதவி கேட்டுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி 24 அன்று உருசியா உக்ரைன்மீது பாரிய படையெடுப்பைப் தொடக்கியது. 2014 இல் தொடங்கிய உருசிய - உக்ரேனியப் போரின் ஒரு பெரிய விரிவாக்கம்தான் இந்தப் படையெடுப்பு. உருசியா உக்ரைன் தலைநகர் கீவை ஒரு சில நாட்களில் அல்லது ஒரு கிழமைக்குள் பிடித்துவிடும் என்றுதான் பலரும் நினைத்தார்கள். மாறாக உருசிய - உக்ரைன்போர் இன்றுடன் (ஒக்ரோபர் 22) 241 நாட்களாக நீடித்து வருகிறது. இந்தப் படையெடுப்பு இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிர்களையும் பல்லாயிரக்கணக்கான பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களையும் நாசமாக்கியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அய்ரோப்பாவின் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடியை ஏற்படுத்தியது. ஒக்தோபர் 18, 2022 நிலவரப்படி 77 இலட்சம் உக்ரேனியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

யுத்தம் நீடித்து வருவதற்கு முக்கிய காரணம் உக்ரைன்ஒரு சின்ன நாடல்ல. ஓரளவு படைபலம் மிக்க நாடு. உருசியா ஒரு வல்லரசாக இருந்தாலும் மேற்கு நாடுகளின் பல பில்லியன் டொலர் பெறுமதியான நவீன இராணுவ ஆயுத, தளபாட உதவிகள் மூலம் உக்ரைன் உருசிய தாக்குதலைத் தடுத்து வருகிறது.

மேற்கத்திய ஊடகங்களைப் படிப்போர் உக்ரைன்வலிமைமிக்க உருசியாவிற்கு எதிரான போரில் வெற்றி பெற்று வருறுகிறது என்ற முடிவுக்கு வருவார்கள். மேற்கத்திய ஊடகக் கதைகளை நம்பினால் அப்படித்தான் தோன்றும். உருசியா ருடே மற்றும் ஸ்புட்னிக் ஆகிய உருசியா சார்பு ஊடகங்கள் மேற்குலக நாடுகளில் தடைசெய்யப்பட்டுவிட்டன. உக்ரைன்போர் தொடங்கியதில் இருந்து, உலகம் ஒருதலைப்பட்சமான - மேற்கத்திய ஊடகங்களின் திரிபுபடுத்தப்பட்ட - செய்திகளையே படிக்கத் தள்ளப்பட்டுள்ளார். இதனை மேற்குலக நாடுகளின் பரப்புரை அல்லது பாசாங்குத்தனம் என்று அழைக்கலாம்.

உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் பிரிவு 19 கருத்து மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. இந்த உரிமையானது தலையீடு இல்லாமல் கருத்துக்களை வைத்திருப்பதற்கும், எந்த ஒரு ஊடகம் மூலமாகவும் மற்றும் எல்லைகளைப் பொருட்படுத்தாமல் தகவல்வல்களைத் தேடுவதற்கும், பெறுவதற்கும் மற்றும் வழங்குவதற்கும் ஆன சுதந்திரங்களை உள்ளடக்கியது. பிரிவு 19 "எல்லைகளைப் பொருட்படுத்தாமல்" என்ற சொற்றொடரின் கருத்து சுதந்திரம் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். உருசியா அல்லது உருசியாவின் நிதியுதவி பெறும் ஊடகங்கள் ஒருதலைப்பட்சமாக நடந்துகொண்டிருந்தாலும் கூட, கருத்துக்கள் மற்றும் கருத்துக்களைப் பரப்புவதை முடக்கும் எந்தவொரு முயற்சியும், பிரிவு 19 இன் அப்பட்டமான மீறலாகும். இது கண்டிக்கப்பட வேண்டும்.

மேற்கத்திய ஊடகங்களில் நாம் பார்க்கும் அல்லது படிக்கும் செய்திகள், உக்ரைன்போரில் உருசியா தோல்விக்கு மேல் தோல்வியை எதிர்கொள்கிறது. உக்ரேனிய துருப்புக்கள் உருசியா இணைத்த பகுதிகளை **(Donetsk, Luhansk, Kherson, and Zaporizhzhia)** மீட்டுவருகின்றன, உருசியாவின் சனாதிபதி விளாடிமிர் புட்டினின் அணிதிரட்டல் அழைப்பை அடுத்து ஆயிரக்கணக்கான இளம் உருசியர்கள் கிடைக்கக்கூடிய அடுத்த விமானத்தைப் பிடித்து நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என மேற்குலக நாடுகள் செய்தி வெளியிட்டன. போரில் உண்மைதான் முதற்பலி என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.

உருசியா உக்ரைன்மீது ஏன் படையெடுத்தது? அதற்கான காரணங்கள் என்ன? சரியாக 31 ஆண்டுகளுக்கு முன்பு சோவியத் ஒன்றியம் டிசெம்பர் 25, 1991 அன்று கலைக்கப்பட்டது. அதனை அடுத்து 1922 ஆண்டு முதலே அந்த ஒன்றியத்தில் உறுப்புரிமை வகித்து வந்த உருசியா, உக்ரைன், பெலாரஸ், கஜகஸ்தான் உள்ளிட்ட 14 நாடுகள் தங்களைத் தனிநாடாக அறிவித்துக் கொண்டன.

மிக அருகருகே இருந்த காரணத்தால் உருசியாவும் உக்ரைனும் நெருங்கிய மொழி, பண்பாடு, நட்புறவு கொண்ட நாடுகளாகவே முதலில் இருந்தன. ஆனால் 2000 க்குப் பிறகு எலியும் பூனையும் போல் ஆகிவிட்டன. 2014 இல் சோவியத் ஒன்றிய காலத்தில் உக்ரேனுடன் அன்றைய சோவியத் நாட்டின் தலைவர் நிக்கிட்ரா குருச்சேவ் அவரால் இணைக்கப்பட்ட கிரிமியா தீபகற்தை அதிரடியாக தன்னோடு உருசியா இணைத்துக் கொண்டது. இதன் மூலம் உருசியா தனது எல்லையை கருங்கடல்வரை விரிவுபடுத்தியது.

கிரிமியாவை உருசியாவை இணைத்ததை அடுத்து, உக்ரேனில் நாடு தழுவிய உருசிய எதிர்ப்பு உணர்வலைகள் எழுந்தன. வலதுசாரி அரசியல் கட்சிகளுக்கான ஆதரவு அதிகரித்தது. உக்ரைனியப் புரட்சிக்குப் பிறகு, பெப்ரவரி 2017 இல் உருசியாவிலிருந்து நூல்கள் இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டது. இதன் மூலம் உக்ரேனிய அரசு உருசிய மொழியின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தது. மே 23, 2017 அன்று, உருசிய மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க, பெரும்பாலான ஒளிபரப்புக்கள் உக்ரைனிய மொழியில் இருக்க வேண்டும் என்ற சட்டத்திற்கு உக்ரைனிய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது. அப்போதிருந்து, உருசிய மொழியும் பள்ளிகளில் கற்பிக்கப்படுவது தடைசெய்யப்பட்டது. இதனால் உருசியாவில் பிறந்த உருசிய உக்ரேனியர்கள் தங்கள் சொந்த மொழியில் பேசுவதை கைவிட்டு உக்ரேனிய மொழியைப் பேசுகிறார்கள்.

1949 இல் உருசிய ஒன்றியத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ கூட்டமைப்பில் சேர உக்ரைன்ஆர்வம் காட்டியது. நேட்டோ அமைப்பு பல கிழக்கு அய்ரோப்பிய நாடுகளையும் சேர்த்துக் கொண்டது. நேட்டோ அமைப்பில் உள்ள ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு படையெடுத்தால் அது முழு நேட்டோ நாடுகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகக் கருதப்படும். தற்சமயம் நேட்டோ அமைப்பில் 30 நாடுகள் உறுப்பினராக உள்ளன.

நாலு கோடியே நாற்பது இலட்சம் மக்கள் தொகை கொண்ட உக்ரைன் நாடு நேட்டோ அமைப்பில் சேர்ந்தால் அது தனது பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தலாக அமையும் என உருசியாவின் சனாதிபதி புட்டின் கருதுகிறார். அதனால் உக்கிரைன் நேட்டோ அமைப்பில் சேரக் கூடாது என புட்டின் வெளிப்படையாக அண்மைக் காலத்தில் வற்புறுத்தி வருகிறார்.அதே நேரம் உருசியாவை சுற்றி வளைக்க நேட்டோ அமைப்பில் உள்ள அமெரிக்கா, கனடா மற்றும் அய்ரோப்பிய நாடுகள் உக்ரைனை சேர்த்துக் கொள்வதில் அதித அக்கறை காட்டி வருகின்றன. அது தொடர்பாக உக்ரைன் நாட்டுக்கு இராணுவ தளபாடங்கள், பயிற்சி, உளவுத் தரவுகளை தாராளமாகவும் ஏராளமாகவும் உதவி வருகின்றன.

இருந்தும் நேட்டோ நாடுகள் தங்கள் படையை உருசியாவுக்கு எதிராகவும் உக்கிரேனுக்கு ஆதரவாகவும் தரையிறக்கத் தயாரில்லை. உருசியாவுக்கு எதிரான போரை உக்ரைன் நாட்டு போர்வீரர்களை வைத்து நேட்டோ நாடுகள் நடத்தி வருகிறது. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் உருசியாவிற்கு எதிராகப் பல பொருளாதாரத் தடைகளை விதித்தாலும், வங்கிக் கணக்குகளையும் சொத்துக்களையும் முடக்கினாலும் உருசியா அசைவதாகத் தெரியவில்லை. மறுபுறம் இந்தத் தடைகளால் மேற்குலக நாடுகளின் பொருளாதாரம் மட்டும் அல்ல உலகளாவிய அளவில் பணவீக்கம், விலைவாசி உயர்வு, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு தோன்றியுள்ளன.

உக்கிரேன் நாட்டின் சனாதிபதி வொலோடிமர் செலன்ஸ்கி **(Volodymyr Zelenskyy)** வெல்ல முடியாத ஒரு யுத்தத்தை உருசியாவுக்கு எதிராக நடத்திக் கொண்டிருக்கிறார். அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உருசியாதான் உலகின் இரண்டாவது பெரிய இராணுவப் படையணிகளை வைத்திருக்கிறது. . **Business Inside** இன் கூற்றுப்படி, உருசியா உலகின் மிகப்பெரிய தாங்கிக் படையையும், அமெரிக்காவிற்குப் பின்னால் இரண்டாவது பெரிய விமானம் மற்றும் கடற்படையையும், அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பின்னால் மூன்றாவது பெரிய நீர்மூழ்கிக் கப்பல் படைகளையும் கொண்டுள்ளது. 2008 ஆம் ஆண்டிலிருந்து உருசியாவின் இராணுவச் செலவு கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக அதிகரித்துள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 44மூ அதிகமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிரியாவிற்கும், எல்லைக்கு அப்பால் ஜார்ஜியாவிற்கும் இப்போது உக்ரைனுக்கும் தனது படைகளை அனுப்புவதன் மூலம் வெளிநாட்டில் படைகளை நடத்தும் திறனை உருசியா எண்பித்துள்ளது.

மாறாக, இராணுவ பலத்தில் உக்ரைன் 22 ஆவது இடத்தில் உள்ளது. போரின் தொடக்கத்தில் இருந்து, உருசியாவை பலவீனப்படுத்துதல், சீர்குலைத்தல் மற்றும் துண்டு துண்டாகச் சிதறச் செய்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்ட மேற்கின் பினாமி போரை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்கா மற்றும் சுமார் 50 அமெரிக்க நட்பு நாடுகளிடமிருந்து உக்ரைன் பாரிய இராணுவ உதவியைப் பெற்றுள்ளது. பெப்ரவரியில் போர் தொடங்கியதில் இருந்து, உக்ரைனுக்கு 15.8 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள இராணுவ தளபாடங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உருசியாதான் உலகின் இரண்டாவது பெரிய இராணுவப் படையை வைத்திருக்கிறது. டீரளளைநளள ஐளெனைந இன் கூற்றுப்படி, உருசியா உலகின் மிகப்பெரிய தாங்கிக் படையையும், அமெரிக்காவிற்குப் பின்னால் இரண்டாவது பெரிய விமானக் கடற்படையையும், அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பின்னால் மூன்றாவது பெரிய நீர்மூழ்கிக் கடற்படையையும் கொண்டுள்ளது. 2008 ஆம் ஆண்டிலிருந்து உருசியாவின் இராணுவச் செலவு கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக அதிகரித்துள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 44மூ அதிகமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிரியாவிற்கும், எல்லைக்கு அப்பால் ஜார்ஜியாவிற்கும் இப்போது உக்ரேனுக்கும் தனது படைகளை அனுப்புவதன் மூலம் வெளிநாட்டில் படைகளை வெளிப்படுத்தும் திறனை உருசியா எண்பித்துள்ளது.

உருசியா-உக்ரைன் போர் என்பது போர்க்களத்தில் மட்டும் நின்றுவிடவில்லை. முதல் நாளிலிருந்தே, போர் பொருளாதாரத் துறையில் பரவியது, மேற்கத்திய நாடுகள் உருசியா மீது பொருளாதாரத் தடைகளை குவித்தன, அதே நேரத்தில் மேற்கு நாடுகளில் முதலீடு செய்யப்பட்ட 300 பில்லியன் அமெரிக்க டாலர் உருசிய நாட்டுச் சொத்துக்களை முடக்கியது. ஆனால் இந்த பொருளாதார தாக்குதல்கள் உருசியாவை சரணடைய வைக்கவில்லை. தலை வெல்ல முடியவில்லை. மாறாக, பொருளாதாரத் தடைகள் மேற்கு நாடுகளின் மீது பூமராங் செய்து, ஐரோப்பாவில் கடுமையான எரிசக்தி நெருக்கடியை ஏற்படுத்தி, பணவீக்க விகிதங்கள் அதிகரித்து வருகின்றன.

எட்டு மாத யுத்தம் காரணமாக உக்கிரைன் உட்கட்டமைப்பில் மூன்றில் ஒரு பகுதி அழிக்கப்பட்டு விட்டது. கட்டிடங்கள், வாழ்விடங்கள் தரைமட்டமாகக்கப் பட்டுவிட்டன. மின்சாரம், தண்ணீர் வழங்கல் தடை பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளின் உதவிகளே உக்ரைன் முற்றாக மூழ்கிப் போகாமல் மிதக்க வைத்து வருகிறது.

உருசியாவைப் பொறுத்தளவில் அந்த நாடு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர அவசரப்படவில்லை. அடுத்த ஆண்டிலும் யுத்தத்தைத் தொடர உருசியா திட்டமிட்டுள்ளது. இந்தப் பின்னணியில் உக்ரைனின் சனாபதிபதி செலன்ஸ்கி வெல்ல முடியாத ஒரு யுத்தத்தை எவ்வளவு காலத்துக்கு தாக்குப் பிடிக்கப் போகிறார் என்பதே இன்றைய கேள்வி ஆகும்.

கனடிய செய்திகள்
Canadian News

# "உதயன் சர்வதேச விருது விழா – 2022"ல் வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இருவருக்கு மொன்றியால் மாநகரில் அளிக்கப்பெற்ற வரவேற்புபசாரம்

கடந்த 15ம் திகதி சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "உதயன் சர்வதேச விருது விழா - 2022"ல் வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இருவருக்கு மொன்றியால் மாநகரில் அளிக்கப்பெற்ற வரவேற்புபசாரம் மற்றும் நூல் வெளியீட்டு வைபவம் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

மொன்றியால் திருமுருகன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஆர்வத்துடன் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் மற்றும் இலங்கைக்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் திரு. நிரோஸ் தியாகராஜா ஆகியோருக்கே இந்த வரவேற்புபசாரம் வைபவம் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

மொன்றியால் வாழ் அன்பர்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகளை திருவாளர் வாகீசன். உதயகுமார். வீணைமைந்தன் சண்முகராஜா. சிவஸ்ரீ ஸ்ரீ ஐயா ஏம்எம்ஆர். ராஜ்கோபால் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர். சிவாச்சாரியப் பெருமக்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் கலை இலக்கிய நண்பர்கள் என பலரும் கலந்து



சிறப்பித்தனர்.

தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் மற்றும் இலங்கைக்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் திரு. நிரோஸ் தியாகராஜா ஆகியோர் நன்றி தெரிவித்தும் பல கருத்துக்கள் கொண்டதாகவும் தங்கள் உரைகளை வழங்கினர்.

கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் அங்கு உரையாற்றினார். அத்துடன் தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் உதயன் வார இதழில் எழுதிய "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" என்னும் நூலின் பிரதிகளும் மொன்றியால் வாழ் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

















Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

905-201-8900

# விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க கோரிக்கை



தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்குமாறு ஜனநாயக போராளிகள் கட்சியினர் இந்திய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்ததாக அதன் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புதன்கிழமை (19) நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அண்மையில் ஜனநாயக போராளிகள் கட்சிக்கு இந்தியா செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் டில்லியில் பா.ஜ.க.வின் முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்தபோது பல்வேறுபட்ட கோரிக்கையினை முன் வைத்திருந்தோம். அந்த கோரிக்கைகள் அவரால் செவி சாய்க்கப்பட்டதோடு அதற்கு தீர்வுகள் வழங்கப்படும் என நம்புகின்றோம்" என்று அவர் கூறினார்.

அந்த ஊடக சந்திப்பின் போது, மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும், தொல்லியல் திணைக்களத்தினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் புனித பூமி அல்லது பௌத்த சின்னங்களை உடைய பூமி பெயரால் தொடர்ச்சியாக பிரச்சனைகளை ஏற்படுத்தப்படுகின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கிழக்கு மாகாண பகுதிகளில் இஸ்லாமிய மக்கள் தமிழர்களின் காணிகளை அபகரித்து திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமை நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தேர்தல் அரசியலுக்கு வந்திருக்கின்ற விடுதலைப் புலிகளை அவர்களது தேர்தல் ஜனநாயக வழிமுறைகளை ஏற்று தம்மீதான தடையினை இந்தியா நீக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

"தெற்காசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான ஒரு சமஸ்டி அடிப்படையில் தீர்வுவழங்கப்பட வேண்டும். 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையிலே கொண்டுவரப்பட்ட 13 வது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி ஐ. நா சபையில் வலியுறுத்தியது போல இங்கே அது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கையினை நாங்கள் விடுத்திருக்கின்றோம்" என்று துளசி தெரிவித்தார்.

இந்தியா செய்திகள்
India News

# பெங்களூருவில் திருவள்ளுவர் சிலையின் பீடம் தகர்ப்பு

பெங்களூருவில் உள்ள திருவள்ளுவர் சிலை பீடத்தை சட்ட விரோதமாக இடித்த பாஜக நிர்வாகியை கைது செய்ய வலியுறுத்தி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2009ம் ஆண்டு பெங்களூருவில் உள்ள அல்சூர் ஏரி கரையில் திருவள்ளுவர் சிலையை, அப்போதைய முதலமைச்சராக இருந்த எடியூரப்பா தலைமையில் நடந்த விழாவில் அன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார்.

இந்த நிலையில் சிலை அமைத்துள்ள பூங்காவை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்து சிவாஜி நகர் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ரிஸ்வான் அர்சத் பணிகளை தொடங்கினார். திருவள்ளுவர் சிலையை சுற்றி பிரம்மாண்ட பீடம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் சிலைக்கு கீழே இருந்த எடியூரப்பா பெயர் பொறித்த கல்வெட்டு மறைக்கப்பட்டதாக கூறி பாஜகவினர் சிலர் ஜேசிபி வாகனத்தை கொண்டு பீடத்தை இடித்துத் தள்ளினர்.



இந்த சம்பவத்தை கண்டித்து திருவள்ளுவர் சிலை எதிரே காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த காந்திநகர் சட்டமன்ற உறுப்பினர் தினேஷ் குண்டுராவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பல்வேறு சமூக ஆர்வலர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளும் போராட்டத்தில் பங்கேற்று பாஜகவினரின் செயலை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, ரிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இங்கிலாந்தில் தலைமையகத்தைக் கொண்ட GRIFFIN COLLEGE LONDON நிர்வாகிகளை தனது அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி





இங்கிலாந்தில் தலைமையகத்தைக் கொண்ட **GRIFFIN COLLEGE LONDON** நிர்வாகிகளை கடந்த செவ்வாய்க்கிழமை மார்க்கம் நகரில் அமைந்துள்ள தனது அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் நிர்வாகிகளைப் பாராட்டி ஒன்றாரியோ அரசு சார்பான கௌரவச் சான்றிதழ் ஒன்றையும் வழங்கினார்.

நிறுவனத்தின் தலைவர் திரு நாதன் ராகுலன் தனது குழுவினருடன் இங்கிலாந்திலிருந்து கனடாவிற்க வருகை தந்து கனடாவில் கல்லூரியின் கிளையை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருந்தார். அதற்கான வைபவத்தையும் நடத்தினார்.

இதனை யொட்டி ஒன்றாரியோ மாகாண உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் நிர்வாகிகளைப் பாராட்டி ஒன்றாரியோ அரசு சார்பான கௌரவச் சான்றிதழ் ஒன்றையும் வழங்கினார்.

கனடாவில் உள்ள பல நுண்கலைக் கல்லூரிகளின் ஆசிரியைகள் தங்கள் மாணவிகளை இந்த கல்லூரி உலகளவில் நடத்தும் பரீட்சைகளுக்கு அனுமதிக்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.







**Sapphire Banquet & Catering**

---------------------------

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers - and more...

**SHIVA SUBRAMANIAM**
**(647) 406-4868**



# புனர்வாழ்வு பணியக சட்டமூலம்: மக்களின் தன்னெழுச்சி போராட்டங்களை கையாள்வதற்கான புதிய ஏற்பாடா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

“இலங்கை அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட புனர்வாழ்வு முயற்சிகள் குற்றம்சாட்டப்படாமல் தடுப்புக்காவலில் வைப்பதற்கான துஸ்பிரயோக நடவடிக்கையாக தோன்றுகின்றதே தவிர வேறொன்றுமில்லை” இவ்வாறு கூறியிருப்பவர் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி ஆகும்.

இலங்கை நாடாளுமன்றத்திற்கு செப்டம்பர் 23ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியக சட்டமூலம் போதைப்பொருள் பாவனையாளர்கள், முன்னாள் இயக்கத்தவர்கள், வன்முறை தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்கள், ஏனைய குழுக்களை சேர்ந்தவர்கள் ஆகியோரை கட்டாயமாக புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைப்பதற்கு அனுமதிக்கும்.

பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படும் பாதுகாப்பு தரப்பினர் பணிபுரியும் புனர்வாழ்வு பணியகங்களிற்கான புதிய நிர்வாக கட்டமைப்பை புனர்வாழ்வு பணியக சட்டமூலம் உருவாக்கும்.

இச்சட்டமூலத்தை மனித உரிமை பாதுகாவலர்கள் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் எடுத்து வருகிறார்கள். உத்தேச சட்டமூலம் ஒரு நபரை புனர்வாழ்விற்கு அனுப்புவதற்கான அடிப்படையை விபரிக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இதில் வன்முறை என்ற வார்த்தை வரைவிலக்கணப்படுத்தப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் அது எப்படியும் வியாக்கியானம் செய்யப்படலாம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ள பயங்கரவாதம் என்ற சொல்லை வியாக்கியானப்படுத்துவதைப் போல

ராஜபக்சக்கள் பலமாக காணப்படும் ஒரு நாடாளுமன்றம் இச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு. இச்சட்டமூலத்தை கொண்டு வர வேண்டிய தேவை என்ன? இனி ஒரு அரகலய தோன்றுவதை தடுப்பதுதான். ஒரு மூத்த வழக்கறிஞர் கூறுவது போல நடுத்தர வர்க்கம் புனர்வாழ்வுக்குப் பயந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாது என்று அரசாங்கம் சிந்திக்கின்றது.

இச்சட்டமூலமானது நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரை புனர்வாழ்வுக்கு அனுப்புவதற்கானது அல்ல. அரசாங்கம் வன்முறை என்று அரசாங்கம் கருதும் செயலில் ஈடுபட்ட ஒருவரை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் புனர்வாழ்வுக்கு உட்படுத்த முடியும். அதாவது நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அவர் குற்றவாளியாக காணப்பட வேண்டும் என்று இல்லை.

இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்பில் இது ஒரு புதிய விடயமும் அல்ல. ஏற்கனவே முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களுக்கு இந்த நடைமுறை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்காடி விடுவிக்கப்படுவதற்காக நீண்ட ஆண்டுகள் காத்திருப்பதை விடவும் புனர்வாழ்வை ஏற்றுக் கொள்வதன் மூலம் குறுகிய காலத்துக்குள் வெளியே வரக்கூடிய வாய்ப்பை இந்த நடைமுறை ஏற்படுத்திக் கொடுத்தது. அதன்படி தான் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளும் ஒருவர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவார். 2009க்கு பின் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களை பொறுத்தவரை பயங்கரவாத சட்டத்தின் ஈவிரமற்ற பிடிக்குள் இருந்து தப்புவதற்கு புனர்வாழ்வு என்ற ஏற்பாடு உதவியது எனலாம்.

ஆனால் அங்கேயும் ஒரு அடிப்படை பிரச்சினை இருந்தது. ஒரு நீதிமன்றத்தால் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டவர் அல்லாத ஏனையவர்கள் மீண்டும் வேறு வழக்குகளில் சிக்கக்கூடிய ஆபத்து இருந்தது. தாமாக முன்வந்து புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் எழுதுவதன்மூலம் அந்த நடைமுறைக்கு உட்படும் ஒருவர். பின்னர் புனர்வாழ்வில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் வேறு வழக்குகளின் கீழ் கைது செய்யப்படும் நிலைமைகள் காணப்பட்டன.

புனர்வாழ்வு ஒரு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை அல்லவெனில் குறிப்பிட்ட ஒரு புலிகள் இயக்க உறுப்பினர் அவர் இயக்கத்தில் இருந்த காலத்தில் செய்த ஒரு குற்றத்துக்காக விசாரிக்கப்படும் பொழுது மீண்டும் தண்டனைக்கு உள்ளாக்கப்படக்கூடிய ஏதுநிலைகள் இப்பொழுதும் உண்டு. பொதுவாக ஒருவர் தான் செய்த குற்றத்திற்காக ஒரு முறைதான் தண்டிக்கப்படலாம். ஆனால் நீதிமன்றம் சம்பந்தப்படாத புனர்வாழ்வு நடைமுறையானது ஒரு முன்னாள் இயக்கத்தவர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் தண்டிக்கப்படக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருந்தது. ஏனெனில் புனர்வாழ்வு எனப்படுவது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தண்டனை அல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. 2009க்கு பின் புனர்வாழ்வு பெற்ற சிலர் இவ்வாறு கைது செய்யப்பட்டு வெவ்வேறு வழக்குகளின் கீழ் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது புனர்வாழ்வு நடைமுறையை அரகலியவை நோக்கியும் விஸ்தரிக்கும் நோக்கத்தோடுதான் புதிய சட்டமூலம் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று உலகளாவிய மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் கேட்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகைக்கு அதை ஒரு முன் நிபந்தனையாக வைத்திருக்கிறது. அதனால் பயங்கரவாத தடைச் சட்டத்தை உலகத் தரத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்க போவதாக இலங்கை அரசாங்கம் கூறி வருகிறது. ஆனால் புதிய சட்டமானது முன்னைய சட்டத்தைவிட பயங்கரமானது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட தமிழ் தரப்பில் உள்ள பலரும் கூறுகிறார்கள். இவ்வாறு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு அல்லது மாற்றுமாறு நிர்பந்தங்கள் பிரயோகிக்கப்படும் ஒரு காலகட்டத்தில், அரசாங்கத்திற்கு எதிராகப் போராடக்கூடிய தரப்புகளை அச்சுறுத்தும் விதத்தில் மற்றொரு புதிய ஏற்பாடாக உத்தேச புனர்வாழ்வுச் சட்டம் கொண்டுவரப் படுகின்றதா?

சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததற்காக கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டார்கள். எனினும், பலமான எதிர்ப்பு காரணமாக பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். அப்பொழுதும் புனர்வாழ்வு ஆர்ப்பாட்டக்காரர்களை தண்டிப்பதற்கான ஒரு நடைமுறையாகக் காணப்பட்டது.

பல தசாப்தங்களுக்கு முன்பு அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தன பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்தார். அது தமிழ் மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து. போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களை கைது செய்யத் தேவையான வரையறையற்ற சுதந்திரத்தை அரசு தரப்புக்கு வழங்கியது. இப்பொழுது ஜெஎவர்தனவின் மருமகன் ரணில் விக்கிரமசிங்க புனர்வாழ்வு சட்டமூலத்தை கொண்டு வருவதன்மூலம் அரங்கலியவும் உட்பட அரசாங்கத்துக்கு எதிராகப் போராடக்கூடிய தரப்புகளை புதிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப் பார்க்கின்றார்.

தென்னிலங்கையில் போராடும் தரப்புகளை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்தமை தொடர்பாக கடந்த ஜெனிவா கூட்டத் தொடரில் பிரதாபிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தொடருக்கு முன்னதாக புலம்பெயர்ந்து வாழும் சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். அரகலியவுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். ஜெனிவாவில் சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக அவ்விதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது அதுதான் முதல் தடவை. ஜெனிவா கூட்டத் தொடரில் பொதுவாக தமிழ் மக்கள்தான் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. சிங்களத் தரப்பு தமிழ்மக்களுக்கு எதிராக அதாவது அரசாங்கத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை செய்வதுண்டு. ஆனால் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் புலம்பெயர்ந்த தமிழ் தரப்பைப் போலவே புலம்பெயர்ந்த சிங்களத் தரப்பும் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அப்பொழுது பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஒரு வாக்குறுதியை வழங்கினார். அரகலயவில் ஈடுபட்டவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் கையாள மாட்டோம் என்பதே அந்த வாக்குறுதி. ஆனால் புனர்வாழ்வு சட்டமூலம் எனப்படுவது அரசாங்கம் புனர்வாழ்வு என்பதைப் போராட்டங்களுக்கு எதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறதா என்ற சந்தேகங்களை பலப்படுத்துகின்றது.




## நம்பிக்கை நாயகன்

சுற்றியே பள்ளிச் சிறார்கள் நிற்க
சுறுசுறுப்பாய் அப்துல் கலாமும்
கற்றபின் அரசியலில் இறங்க எத்தனைபேர்
கரிசனை கொண்டு உள்ளீர்?
எத்தனை பேரிதில் எதிர்கால விஞ்ஞானி?
எல்லாக் கைகளும் எழுந்தன
சத்திய மனிதனின் சாதனை இதுவென
சரித்திரம் நிச்சயம் சொல்லுமே!

இலட்சக் கணக்கான இளைய மாணவரை
இந்தியாவைத் தமிழை நேசித்தார்
இலட்சியம் கொண்ட எல்லோரின் உதாரணம்
இலக்குள்ள இவரின் வாழ்க்கை
எத்தனை விருதுகள் எவ்வளவு பட்டங்கள்
எல்லாம் மேலாகப் புனிதன்
இத்தனை காலமும் இவரொரு பிரமச்சாரி
இப்புவி இளைஞர் இவர்மகவே!

இந்த மனிதர் இறைத்த வதைகள்
இங்குள்ள இளைஞரிலும் முளைக்கும்
சொந்தச் சொத்தான “அக்கினிச் சிறகுகள்”
சோதியாய் சுடர்விட்டு நிலைக்கும்
நம்பிக்கை ஊட்டும் நல்லுரை செய்த
நல்லாசான் ஒப்பற்ற விஞ்ஞானி
எம்மை விட்டு எங்கோ சென்றாலும்
எந்நாளும் மறையா அவர்பெயரே!

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-97453**


Hon.
MARY NG, MP
MARKHAM – THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
16 Esna Park Drive, Unit 107
Markham, ON L3R 5X1
Happy Diwali
மகிழ்ச்சியான தீபாவளி
வாழ்த்துக்கள்


ELECT
Michael Chan
For Regional Councillor, City of Markham
"Progress Together"
• Experience
• Tenacious advocate
• Record of Accomplishments
VOTE Oct 14 - 24
www.votemichaelchan.ca
அரசியல் அனுபவம்
உறுதியுடன் போராடுபவர்
சேவைகள் வழங்குவதில் சாதனை படைத்தவர்


VOTE SHANTA SUNDARASON
For Regional Councillor
STRONGER TOGETHER
Getting Things Done. For You!
Healthcare
Transit
Sustainability
Recreation
Read Full Platform at:
ShantaSundarason.ca
ShantaSundarason@gmail.com
(647) 389-8828


ELECT
/voteDarshansri
@voteDarshansri
@voteDarshansri
DARSHAN
SRITHARAN
Candidate for City Councillor
Ward 3
BULDING A STRONGER PICKERING
நான் நகர சபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டதும் நான் கீழ்க்காணும் விடயங்களில் உடன் கவனம் செலுத்துவேன்.
1. எம் தொகுதியில் வாழும் வயது முதிர்ந்தோர்கள் மற்றும் முதல் தரம் வீடு வாங்குவோர் வாங்கக்கூடிய நிலமைக்காக வேலை செய்வேன்
2. நகரசபை பொறுப்பான உட் கட்டுமானங்களில் ஈடுபடுவதற்காக உழைப்பேன்
3. எம் தொகுதிக்கு அதி உச்ச வேதனம் தரத்தக்க தொழில்ச்சாலைகளை உருவாக்கவும் கொண்டுவரவும் பாடுபடுவேன்
4. எம் தொகுதிதியில் நல்ல உட் கட்டுமானங்களை உருவாக்க பாடுபடுவேன்.
வாக்குப்பதிவு அக்டோபர் 17 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு தொடங்கி அக்டோபர் 24 அன்று இரவு 8.00 மணிக்கு முடிவடைகிறது
darshansri.ca
416-836-0345
vote@darshansri.ca


OCTOBER 14 TO OCTOBER 24 2022
VOTE
சோபியா சன்
SOPHIA
SUN
FOR MARKHAM REGIONAL COUNCILLOR
Improve Community Safety and Security
Create Employment Opportunities for Youth
Strengthen Local Economy
Enhance Seniors Services
Promote Multicultural Community
WORKING FOR YOU
உங்களுக்காக வேலை செய்கிறோம்
416-505-8888
VOTESOPHIASUN2022@GMAIL.COM
WWW.VOTESOPHIASUN.COM
CAMPAIGN OFFICE: 8791 WOODBINE AVE UNIT 204 MARKHAM, ON, L3R 0P4
Markham Stouffville Hospital Foundation
Raising $750,000.00
萬錦多福醫院攀登珠峰籌款
Member of Parliament Salma Zahid
2022 Sophia Sun Constituents' Support
Sophia SUN 萬錦居民聚會


பரதநாட்டிய அரங்கேற்றம்
எல்லாம் வல்ல நடராஜா பெருமான் அருளோடு
October 22, 2022 சனிக்கிழமையன்று
மாலை 5:00 மணிக்கு மிசிசாகாவில் உள்ள
Meadowvale Theatre ல் நடைபெறும்
(6315 Montevideo Road, Mississauga ON L5N 4G7)
சிலம்பொலி சேஸ்த்ர நடன பள்ளியின் அதிபர்
ஸ்ரீமதி ஜனனி குமார் அவர்களின் மாணவியும்
எங்கள் புதல்வியுமான
சார்கவி கஜதீபன்
அவர்களின் பரதநாட்டிய
அரகேற்ற நிகழ்விற்கு வருகை
தந்து சிறப்பிக்கும் வண்ணம்
உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு:
திரு. திருமதி கஜன், சுஜா
647-964-1808 416-890-7941
குரு ஸ்ரீமதி ஜனனி குமார்:
647-338-7850


Toronto District School Board
ஆரம்பகால பிரஞ்சு கற்கை நெறி
சிறுவர் வகுப்புகளில் தொடங்குகின்றது
விண்ணப்பிக்கும் திகதி அக்டோபர் 31, 2022 ஆரம்பம்
விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி: நவம்பர் 25, 2022
இணைவழி மூலம் விண்ணப்பிக்கலாம்
www.tdsb.on.ca/french

# "Hindu Tamils in Sri Lanka Victims of Racial Strife" Madras High Court


Justice GR Swaminathan

A senior judge of the Madras High Court has said the 'Hindu Tamils in Sri Lanka are victims of the racial strife'.


Justice G R Swaminathan wrote this in his judgement while directing the authorities to forward the application of a woman born to Sri Lankan immigrant parents for consideration of granting Indian citizenship.

The 29-year-old women was born in a refugee in the Tiruchirappalli district in central Tamil Nadu.

Correlating the recently amended Citizenship Act in India, Justice Swaminathan made the above comment.

"The Parliament has recently amended the Citizenship Act. The persecuted minorities from the immediate neighbourhood such as Pakistan, Afghanistan, and Bangladesh now have an opportunity of getting Indian Citizenship. Though Sri Lanka does not fall within the said amendment, the very same principle is equally applicable. One can take judicial notice of the fact that the Hindu Tamils of Sri Lanka were the primary victims of racial strife. Though the Central Government has to take a call in the matter, there cannot be any impediment for considering the writ petitioner's request."

In his judgement he further pointed out the woman Abirami was born in India and has lived in the country all her life. Also, she did not hold Sri Lankan citizenship, and if she was denied Indian citizenship, she will be rendered stateless it added.



The court observed that Abirami's parents had come to India in the 1990s as they could not continue living in Sri Lanka "on account of the ethnic strife".

The judge said if her request was not adhered to, she would be rendered stateless.

"In the case in hand, though the petitioner is a descendant of migrant parents, she was born in India. She has never been a Sri Lankan citizen and therefore the question of renouncing the same does not arise. If the petitioner's request is not granted, that would lead to her statelessness. That is the situation which has to be avoided,".

The authorities too came in for some criticism from the judge, who said the State government and the district authorities should have forwarded her application for citizenship to the Federal government to take a final decision.

Accepting her petition for the issuance of an Indian passport the judge gave the state and the Federal government sixteen weeks' time to decide on the matter.

While delivering his judgement Justice Swaminathan said he also relied on one of his earlier judgments in 2019 and quoted from it.

"The petitioners have amply demonstrated that they have formed the intention of making India their permanent home. The Government of India had given an undertaking that they will not be compulsorily sent back to Sri Lanka. Therefore, the case on hand presents a rather unique situation. In mythology, there is a region called "Thirisangu Sorgam" (loosely meaning neither here nor there) The petitioners are in a similar situation. They have come away from Sri Lanka, but they have not been absorbed here. But the camps in which they have been housed are far from being a Sorgam (heaven). The camp conditions are hellish".



Justice Swaminathan in the said earlier judgment of his has also spoken about the life of those who arrived from Sri Lanka and living in camps. His judgement in a related case in 2019 pointed out that the petitioners, in that case, have been living in camps for close to 35 years.

"The petitioners have been in camps for close to 35 years. Keeping them under surveillance and severely restricted conditions and in a state of statelessness for such a long period certainly offends their right under Article 21 of the Constitution of India".

He also strongly criticised the state and the federal governments for not approaching the issue in a humane and pragmatic way and rather going by the strict edicts of the law. Stating those who came to India faced a grave threat to their lives and had to seek asylum in India.



"A person who is running for his life cannot obviously be expected to wait for a visa. Therefore, viewing the petitioners' case through the prism of the technical requirements of law does not appear to be a humanitarian approach."

Human Rights activists and a batch of attorneys from Tamil Nadu recently met the India's junior minister for external affairs V Muraleedharan, who according to them assured that the case relating to Sri Lankan Tamils living in refugee camps in Tamil Nadu would be sympathetically considered by the Federal Government.

In yet another case, the same judge ordered the issue of an Indian Passport to a refugee who was in the camp for over 30 years. In this case Ms Nalini who was born in India was denied a passport by the authorities.

According to court documents, Nalini's parents were Sri Lankan Nationals who came to India on account of Anti-Tamil riots erupted in Sri Lanka. After their arrival in the year 1985, Mrs. Nalini was born in Mandapam refugee camp at Rameswaram in 1986. According to Section 3(1)(a) of the Citizenship Act, 1955 every person born in India on or after 25.01.1950 and before the first day of July 1987 shall be a citizen of India by birth. Thus, a person claiming to be a citizen by birth does not have to apply to any authority for recognition or declaration as such.

The judge in his order noted "Since the Petitioner was born in India in 1986 and her birth certificate issued by the competent authority is not in question, she is an Indian Citizen by birth. For such a legal recognition, she has approached the Respondent i.e., the Regional Passport Office at Trichy for issuance of Indian passport.

Earlier her application was rejected stating that her nationality was doubtful and she is a Sri Lankan national.

Her Attorney Romeo Roy Alfred speaking to this writer said "In pursuance of above order of the Hon'ble High Court, Mrs. Nalini was awarded with Indian Passport on 30.09.2022. Now here comes the question, whether she could move out of the camp and live. Answer is yes but she was put to live as refugee since her birth. No political rights or social protection such as reservation was given. Now she has not even own an inch of land in Indian Soil. So, she has requested for a Rehabilitation package to the Government for assimilating with the Indian society".

Another irony is that Mrs. Nalini's Great Grand Father Mr.Vellaichamythevar was a Indian freedom fighter. He is no more now but was receiving a Freedom fighter pension on account of his devoted service towards the Independence. His Grandchild lived as Refugee confined in the camps, in the own soil where he crusaded for freedom and gave a supreme contribution to this nation is regrettable reminisces Romeo Roy Alfred.

There are around 60,000 people residing in 108 Sri Lankan Refugee Camps across Tamil Nadu and there are 34,000 people living outside the camps. Out of such 94,000 people, more than 90% of them



# “ஸ்டாலினால் தன் கட்சியினரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனெனில்...” தமிழருவி மணியன்



“இரண்டு திராவிட கட்சிகளிடம் இருந்தும் தமிழகம் விடுபட வேண்டும் என்பதுதான் எங்கள் இலக்கு”, “தற்போது அமைச்சர்களால் தன்னால் தூங்க முடியவில்லை என்கிறார் முதல்வர் ஸ்டாலின். ஆனால், ஜெயலலிதா காலத்தில் அமைச்சர்களால்தான் தூங்க முடிந்ததில்லை”, “எல்லாருக்குமான கட்சியாக பாஜக இருக்கிறதா என்ற கேள்வி வரும்போது, அதன் வளர்ச்சி குறித்து நாம் நிரம்ப யோசிக்க வேண்டியிருக்கிறது.”, “ராகுல் காந்தியின் யாத்திரை ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது.”... இப்படி சமகால அரசியல் சார்ந்து தெறிப்புக் கருத்துகளை உதிர்க்கிறார் தமிழருவி மணியன்.

‘காமராஜர் மக்கள் கட்சி’ எனும் புதிய அரசியல் கட்சியை நிறுவி இருக்கும் மூத்த அரசியல் ஆளுமை தமிழருவி மணியன் ‘இந்து தமிழ் திசை’ டிஜிட்டலுக்கு அளித்த சிறப்பு நேர்காணல்...எங்கள் மூச்சு, காமராஜர் ஆட்சி என்ற முழக்கத்துடன் காமராஜர் மக்கள் கட்சியை தொடங்கி இருக்கிறீர்கள். காமராஜர் மக்கள் கட்சியை ஆளும் கட்சியாக மாற்றுவதற்கான வியூகம் குறித்து சொல்லுங்க?“இன்றைக்கு இருக்கும் அரசியல் என்பது ஒரு பக்கம் வெறுப்பரசியல். மற்றொரு பக்கம் பண அரசியல். அதற்காகத்தான் அரசியல் அற்ற அரசியலை செய்வதற்காக இந்த கட்சியை தொடங்கி இருக்கிறேன்.

ஒரு கட்சி இன்னொரு கட்சியை விமர்சிப்பது என்பது நான் அரசியலுக்கு வந்தபோது ஆரோக்கியமாக இருந்தது. இன்று அது தனிமனித தாக்குதலாக தரம் தாழ்ந்துவிட்டது. மற்றொன்று, ஊராட்சித் தேர்தலிலேயே கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழித்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு வெறுப்பு அரசியலும் பண அரசியலும் தொடருமானால் தமிழகத்தின் பொதுவாழ்வு பண்பு நலன்கள் அனைத்தும் பாழ்பட்டுப் போகும். எனவே, இவற்றில் இருந்து தமிழகம் விடுபடுவதற்கு ஒரு மாற்றுப் பாதை தேவை. அதற்காகத்தான் தொடர்ந்து முயன்று கொண்டே இருக்கிறேன். அதற்காக பலரையும் நான் முன்னிலைப்படுத்தி இயங்கி இருக்கிறேன். ஆனால், அந்த முயற்சிகள் சரிவரவில்லை.

நான் யாரை முன்னிலைப்படுத்துகிறேனோ அவர்கள் போர் குணத்தோடு சமூக மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும் என்ற முனைப்போடு இறுதிவரை பயணிக்கத் தயாராக இல்லை. எனவே, என்னை நானே மையப்படுத்திக் கொண்டு இந்த அரசியலை மேற்கொண்டு வருகிறேன்.கட்சியின் அடிப்படைக் கட்டுமானத்தை வலுப்படுத்தும் நோக்கில், தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் தகுதிவாய்ந்த தன்னலமற்ற தலைவரை தேர்வு செய்வதற்கான முனைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு தொகுதியின் தலைவராக தேர்வு செய்யப்படுபவர், அந்த தொகுதியின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும்; தொகுதி மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களின் சுக துக்கங்களில் பங்கேற்க வேண்டும். போராட்டங்களை நடத்துவதற்கு மாற்றாக சேவைப்பணிகளில் ஈடுபட வேண்டும். 2026ல் வர இருக்கிற சட்டமன்றத் தேர்தல்தான் எங்கள் இலக்கு. இந்த இடைப்பட்ட காலத்தில் தொகுதி தலைவர்கள், மக்களின் மனங்களை வெல்வதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதற்காக தொகுதி தலைவர்களுக்கு பாடம் நடத்தும் பணியைத்தான் தற்போது செய்து கொண்டிருக்கிறேன்.

”அப்படி என்றால், எதிர்வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் காமராஜர் மக்கள் கட்சி போட்டியிடாதா?“தற்போது எதையும் அறுதியிட்டு இறுதியாகச் சொல்ல இயலாது. சூழல் எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும்.”தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் கூட்டணி அமைத்து போட்டியிடுவீர்களா அல்லது தனித்தா?“இரண்டு திராவிட கட்சிகளிடம் இருந்தும் தமிழகம் விடுபட வேண்டும் என்பதுதான் எங்கள் இலக்கு. ஏனெனில், இரண்டு திராவிட கட்சிகளுக்கும் தமிழர் நலன் குறித்து எந்த சிந்தனையும் கிடையாது. தங்கள் சொந்த குடும்பங்களை வளப்படுத்திக்கொள்வதற்காக அரசியலுக்கு வந்தவர்கள் இவர்கள்.

மக்கள் நலனுக்காக இவர்கள் வரவில்லை. எடப்பாடி பழனிசாமி ஊழலற்ற ஆட்சியை அளித்தார் என்று கூற முடியுமா? அதேபோல், தற்போதைய ஸ்டாலின் அரசு ஊழலின் நிழல்படியாத அரசு என கூற முடியுமா? நிச்சயம் முடியாது. எப்படி ஒரு சிறுத்தையின் உடலில் உள்ள புள்ளிகள் அது சாகும்வரை மறைவதில்லையோ அதுபோல், இந்த இரண்டு திராவிடக் கட்சிகளில் இருப்பவர்களிடம் ஊழலற்ற நல்ல நிர்வாகத்தை நம்மால் பார்க்கவே முடியாது. எனவே, இந்த இரண்டு திராவிட கட்சிகளோடு இணக்கம் கொள்பவர்களோடு எங்களுக்கு இணக்கம் இல்லை. எனவே, நாங்கள் கூட்டணி அமைப்பதாக இருந்தால் அது இரண்டு திராவிட கட்சிகளோடும் கூட்டணி அமைக்காதவர்களுடன்தான் இருக்கும்.

”அப்படியானால், திமுகவும் அதிமுகவும்தான் உங்களின் அரசியல் எதிரிகளா?

“ஆம். கருத்தளவில்தான் இவர்களை எதிரிகளாகப் பார்க்கிறோம். எந்த தனி மனிதரையும் எதிரியாகப் பார்ப்பதில்லை.”திராவிட மாடல் என்ற சொல் இந்திய அளவில் ஈர்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்றும், திராவிட மாடல் அரசு மிகச் சிறந்த ஆட்சியை வழங்கிக்கொண்டிருக்கிறது என்றும் முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார்.

திமுகவின் ஒன்றரை ஆண்டு கால ஆட்சியை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

“இந்த திராவிட மாடலின் தாக்கத்தை கேரளாவிலோ, ஆந்திராவிலோ நீங்கள் பார்க்கிறீர்களா? வட இந்தியாவை விட்டுவிடுங்கள். திராவிடம் என்பதே தென்னிந்தியாதானே. எந்த தென்னிந்திய மாநில ஆட்சியாளர்களாவது இந்த திராவிட மாடல் ஆட்சியைத்தான் நாங்களும் வழங்க விரும்புகிறோம் என்று சொன்னார்களா? சொந்த குழந்தையை சீராட்டி பாராட்டுவதுபோல அவர்கள் சொல்லிக்கொள்ளும் திராவிட மாடலை அவர்களே பாராட்டிக்கொள்கிறார்கள். எந்த மாடல் என்ற பெயர் முக்கியமல்ல. ஒரு ஆட்சி, ஊழலின் நிழல் படியாததாக இருக்க வேண்டும். அமைச்சர்கள் அனைவரும் கடைசிவரை கை சுத்தமானவர்களாக இருக்க வேண்டும். ஏழைகளுக்கு முன்னேற்றத்தைத் தரும் ஆட்சி எந்த பெயரில் இருந்தாலும் அதில் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. ஆனால், தற்போது இருக்கும் ஆட்சி அப்படி இருக்கிறதா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.”திமுக மூத்த நிர்வாகிகள், அமைச்சர்கள் சிலர் புதுப்புது பிரச்னைகளை உருவாக்கி தன்னை தூங்கவிடாமல் செய்துவிடுவதாகவும், அவர்களின் செயல்களால் திமுக பழிகளுக்கும் ஏளனத்துக்கும் ஆளானது என்றும் ஸ்டாலின் கூறி இருக்கிறார்.

திமுகவினரை ஸ்டாலினால் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற விமர்சனத்தை இது ஏற்படுத்தி இருக்கிறது. இதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

“இந்த விமர்சனம் உண்மையானது. ஏனெனில், தலைமைத்துவம் என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஜெயலலிதா உதாரணம். அவர் கீழே இருந்தவர்கள் அனைவரும் தவறானவர்கள்தான். ஆனால், அவர்கள் தனது விரல் அசைவுக்கும் விழி அசைவுக்கும் ஏற்ப செயல்படக்கூடியவர்களாக வைத்திருந்தார். தற்போது அமைச்சர்களால் தன்னால் தூங்க முடியவில்லை என்கிறார் முதல்வர் ஸ்டாலின். ஆனால், ஜெயலலிதா காலத்தில் அமைச்சர்களால்தான் தூங்க முடிந்ததில்லை. நாளை நாம் அமைச்சர்களாக இருப்போமா மாட்டோமா என்ற நினைப்போடுதான் அவர்கள் தூங்கவே சென்றார்கள்.தமிழ்நாட்டில் பயங்கராவாதிகளால் எனக்கு தூக்கம் கெடுகிறது, திமுகவை வேரறுக்க நினைக்கும் சக்திகளால் எனக்கு தூக்கம் கெடுகிறது என முதல்வர் ஸ்டாலின் சொன்னால் அது எனக்கு புரியும். தன் சொந்த கட்சியினராலும், சொந்த அமைச்சர்களாலும் தூக்கம் கெடுகிறது என்று சொன்னால், அவர்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ள இயலவில்லை என அவர் சொல்கிறார் என்று அர்த்தம்.

# லண்டன், அமெரிக்க மருத்துவர்களை விசாரிக்க விடாமல் ஆணையத்தை தடுத்தது யார்? சசிகலா தரப்பு வழக்கறிஞர் கேள்வி

லண்டன் மருத்துவர் ரிச்சர்டு பீலே, அமெரிக்க மருத்துவர் சமீன் சர்மா ஆகியோரை ஏன் விசாரிக்கவில்லை. அவர்களிடம் விசாரிக்க விடாமல் ஆணையத்தை தடுத்தது யார் என சசிகலா தரப்பு வழக்கறிஞர் என்.ராஜா செந்தூர்பாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக ‘இந்து தமிழ் திசை’யிடம் அவர் கூறியதாவது: முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக சுமார் 160 சாட்சிகள் ஆணையத்தால் விசாரிக்கப்பட்டுள்ளனர். இதில் எந்தவொரு சாட்சியும் வி.கே.சசிகலா மீது தவறு இருக்கிறது, குறை இருக்கிறது என குற்றம்சாட்டவில்லை. அந்த சாட்சிகளிடம் நானே குறுக்கு விசாரணை நடத்தியுள்ளேன்.

‘ஆணையத்துக்கு மருத்துவ ஞானம் இல்லை. நாங்கள் ஜெயலலிதாவுக்கு என்ன சிகிச்சை அளித்தோம் என்பதை சரியாக புரிந்துகொள்ளும் வகையில் ஒரு குழுவை அமைக்க வேண்டும்’ என கோரி அப்போலோ மருத்துவமனை தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், கடந்த 2021 நவம்பர் 30ல் இதுதொடர்பாக ஒரு குழுவை அமைக்க எய்ம்ஸ்க்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவில், ‘ஆணையம் தனது எல்லையை மீறி சென்று விடக்கூடாது. அப்போலோ மருத்துவமனையால் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை போதுமானதா, போதுமானதாக



இல்லையா என்பது குறித்த அறிக்கையை ஆணையம் அரசிடம் சமர்ப்பிக்கலாம். ஆனால், அந்த அறிக்கை முழுக்க முழுக்க ஆணையத்தால் விசாரிக்கப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும்’ என உச்ச நீதிமன்றம் தெளிவாக உத்தரவிட்டுள்ளது. அப்படியென்றால், நீதிபதி ஆறுமுகசாமியின் சந்தேகம், ஊகம், இப்படி இருக்கலாம் என்ற எண்ணம் எதுவுமே இந்த எல்லைக்குள் வரக்கூடாது.

ஆனால், எல்லையைத் தாண்டி செயல்பட்டு, ஆணையம் தனது ஊகத்தை கூறியுள்ளது. அந்த ஊகத்துக்கு அடிப்படை ஆதாரம் வேண்டாமா? லண்டன் மருத்துவர் ரிச்சர்டு பீலே, அமெரிக்க மருத்துவர் சமீன் சர்மா ஆகியோரை ஆணையம் ஏன் விசாரிக்கவில்லை? அவர்களிடம் விசாரிக்க வேண்டாம் என தடுத்தது யார்? அவர்களிடம் விசாரித்து இருந்தால், ஜெயலலிதாவுக்கு உலகத்தரமான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என கூறியிருப்பர். அவர்களை இந்த ஆணையம் திட்டமிட்டே விசாரிக்காமல் விட்டுள்ளது.

அதேபோல, ஜெயலலிதாவுக்கு ஆஞ்சியோ பிளாஸ்ட் சிகிச்சை அளிக்க சசிகலா தடுத்ததாக எந்த சாட்சியும் கிடையாது. அது எய்ம்ஸ் மருத்துவர்கள் உள்பட ஒட்டுமொத்த மருத்துவர்களின் ஒருமித்த கருத்து. முறையற்ற சிகிச்சை அளிக்கப்படவில்லை என சசிகலா மீது குற்றம்சாட்ட ஒரு சாட்சிகூட கிடையாது. டிஜிபி, கூடுதல் டிஜிபி, ஐஜி என 9 போலீஸ் உயரதிகாரிகளிடம் ஆணையம் விசாரணை நடத்தியுள்ளது. அதில் சதித்திட்டம் குறித்து யாருமே ஒன்றும் கூறவில்லை.

நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தின் எண்ணமும், புரிதலும் தவறாக இருக்கிறது. வி.கே.சசிகலா, சிவக்குமார், சி.விஜயபாஸ்கர், ஜெ.ராதாகிருஷ்ணன் ஐஏஎஸ் ஆகியோர் மீது சந்தேகப்படுவதைத்தவிர வேறு எதுவுமில்லை என நீதிபதி ஆறுமுகசாமி தெரிவித்துள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் யார் மீதும் குற்றம்சாட்ட சட்டத்தில் இடம் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**
**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**
**நடைபெறும் திருமுறை விழா**
**சிறார்களுக்கான போட்டிகள்**

## பேச்சுப் போட்டி



நவம்பர் 12, 2022 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 | - | 1-10-2016 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 | - | 1-10-2013 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 | - | 1-10-2010 க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை**
**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..............................
2. பிரிவு: ..............................
3. பிறந்த திகதி: ..............................
4. தொலை பேசி இலக்கம்: ..............................
5. முகவரி: ..............................

..............................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

---

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும்**
**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**
**நடைபெறும் திருமுறை விழா**
**சிறார்களுக்கான போட்டிகள்**

## திருமுறை மனனப் போட்டி



நவம்பர் 13, 2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**இடம்: ஆத்மஜோதி இல்லம், 1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

| | | | |
|---|---|---|---|
| பாலர்பிரிவு: | 31-10-2016 | | ஆம் திகதியும் அதன் பின் பிறந்தவர்களும் |
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 | - | 1-10-2016 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 | - | 1-10-2013 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 | - | 1-10-2010 க்கும் இடைப்பட்டவர்கள் |

**பயன்தர வல்ல திருமுறைப்பாக்கள் என்ற திருமுறை புத்தகத்தை**
**ஆத்மஜோதி இல்லத்திலும்**
**முருகன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப் பெயர்: ..............................
2. பிரிவு: ..............................
3. பிறந்த திகதி: ..............................
4. தொலை பேசி இலக்கம்: ..............................
5. முகவரி: ..............................

..............................
ஒப்பம்

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**
**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்
திருமுறை விபரமும் கிடைக்கும் இடமும் கையளிக்கும் இடமும்
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123 **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1018



## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் மலையகம்

"மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற
துன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
ஊன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே."

திரு. சுப்பாபிள்ளை அவர்களின் பின்னர், நொத்தாரிஸ் முருகேசு என்பவர் இக்கோயில் நிர்வாகத்தை நடத்தியுள்ளார். ஆரம்பகாலத்தில் இக்கோயில் பூசைகளை, ஒப்பனைக் கலைஞரும், பின்னர் பண்டாரங்களும் செய்து வந்துள்ளனர். படிப்படியாக ஆலயம் வளர்ச்சிபெற்றதைத் தொடர்ந்து, இந்நிலையிலே மாற்றம் ஏற்பட்டு, பிராமண அர்ச்சகர்கள் பூசைசெய்ய நியமிக்கப்பட்டனர். இக்காலத்தில் இவ்வாலயத்திலே நித்திய பூசைகள் மட்டுமே நடைபெற்றுள்ளது. பின்னர், படிப்படியாகத் திருவிழாக்களும் நடத்தப்பட்டு, சப்பரத்தேர் உலாவரும் வழக்கம் காணப்பட்டுள்ளது. 1934 ஆம் ஆண்டளவில் சப்பரத்தேர் முறையை மாற்றி, விநாயகர், சிவனம்பாள், முருகன் ஆகியோருடன் இரதோற்சவம் நடத்தப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி பெற்றுவந்த மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், திரு. க. குமாரசாமி என்பவர் நிர்வாகத் தலைமையில் பல மாற்றங்களைப் பெற்றது. 1955ம் ஆண்டளவில் இவ்வாலயத்தின் நிர்வாகதலைமைப்பொறுப்பையேற்ற திரு. க. குமாரசாமி அவர்கள், இராஜகோபுரம் உட்பட பல ஆலய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். 1958 ஆம் ஆண்டு பழைய கட்டிடம் முற்றுமுழுதாகத் திருத்தி அமைக்கப்பட்டது. பின்னர் மகாமண்டபம், அர்த்தமண்டபம், மூலத்தானம் போன்றவை அமைக்கப்பட்டன. 1960களில் மூலத்தானத்திற்குரிய கோபுரமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1963 இல் சந்திரசேகரர், சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனி கோயில்களும், நடராஜப்பெருமான் கோயில், வயிரவர் கோயில் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன. 1968 ஆம் ஆண்டு சாத்திரமுறைப்படியான கொடிமரம், தாமிரஉலோகத்தால் செய்யப்பட்டு, மேலே வெள்ளிப்பூச்சுப் பூசப்பட்டு நிறுவப்பட்டது. இவ்வாண்டிலேயே வசந்தமண்டபமும், பின்சுற்றுமதிலும் அமைக்கப்பட்டன. ஆலயத்தினுள்ளே ஆனைமுகன், கருப்பண்ணசாமி, மதுரைவீரர், பஞ்சமுகவிநாயகர், முருகப்பெருமான், ஶ்ரீ விஷ்ணுவின் அனந்தசயனம், சரஸ்வதி, துர்க்காதேவி, லட்சுமி, நவக்கிரகங்கள், மீனாட்சிஅம்பிகை, நந்தி, நடராஜர் சந்நிதானம், நான்கு நாயன்மார்க்குரிய சந்நிதானங்கள் ஆகியனவும் சாத்திர முறைப்படி அமைக்கப்பட்டன. ஆலயத்தினுள்ளே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிவலிங்கம், காசியிலிருந்து கொண்டுவரப்பட்டது.

குடிலாகக் காணப்பட்டு, பின் கற்கோயிலாக மாற்றம்பெற்ற இவ்வாலயத்தை தேவஸ்தான நிலைக்கு உயர்த்துவது இராஜகோபுரமாகும். மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு, 1973 ஆம் ஆண்டு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, கும்பாபி'ேகம் நடைபெற்றது. 1977 ஆம் ஆண்டு ஶ்ரீ முத்துமாரியம்மனுக்குச் சித்திரத்தேர் அமைத்து, வெள்ளோட்டம் விடப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது அற்புதமான இச்சித்திரத்தேரும், ஏனைய இரதங்களும் இனத்துவேசம் கொண்டோரால் எரியூட்டப்பட்டதோடு, கல்யாணமண்டபம் உட்பட ஏனைய பகுதிகளும் சேதமாக்கப்பட்டு, பெரும் அழிவுகள் ஏற்பட்டது. இந்நிலையிலே படிப்படியாக வளர்ச்சிபெற்ற மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலே பூசை, வழிபாடுகள் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டது.

இச்சூழ்நிலையில், மீண்டும் ஆலயத்தைக் கட்டியெழுப்பும் உத்வேகத்துடன், திரு. இராஜரட்ணம் என்பவர், தலைமைப்பொறுப்பேற்றுச் செயற்பட்டார். இவர்காலத்தில் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், திரு. த. மாரிமுத்துச்செட்டியார் என்பவர், மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். தமிழ் மக்கள் மட்டுமன்றி சிற்கள மக்களும், அம்மன் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவர்கள். அம்மக்களும் இவ்வாறான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவது வழக்கம். அறங்காவல் சபைத்தலைவர் பொறுப்பேற்ற திரு. த. மாரிமுத்து அவர்கள் இந்துமக்களோடு ஏனைய இனத்தவரையும் அரவணைத்து, எரியூட்டப்பட்ட சித்திரத்தேரையும், ஏனைய இரதங்களையும் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

திரு. த. மாரிமுத்து அவர்களோடு ஆலயத்திருப்பணியில் அக்கால செயலாளராக விளங்கிய, திரு. சண்முகம் சந்திரசேகரம் அவர்களும் ஈடுபாடு கொண்டு எரியூட்டப்பட்ட ஆலயத்தை மீளக்கட்டியெழுப்புவதில் பெரும்பணியாற்றியுள்ளார். 1999 ஆம் ஆண்டு முதல் திரு. சண்முகம் சந்திரசேகரம் அவர்கள், மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபைத்தலைவராகப் பணியாற்ற ஆரம்பித்தார். இவர் காலத்தில் வடக்கு இராஜகோபுரம், வடக்குவெளிவீதி என்பனவும், அறநெறிப்பாடசாலையும் அமைக்கப்பட்டது.

இவ்வாறாக, காலத்திற்குக் காலம் இந்துஆலயங்கள் பல்வேறு சூழ்நிலைகளில் அழிக்கப்பட்டு வந்தபோதிலும், மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளமை வரலாறு கூறும் உண்மையாகக் காணப்படுகின்றது. பல அழிவுகளைச் சந்தித்தபோதிலும், மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், மீண்டும் மலையகத்தின் தலைசிறந்த ஆலயமாக உருப்பெற்றுள்ளமைக்கு, அன்னைமீது மக்கள் கொண்ட ஆத்மார்த்தமான நம்பிக்கையும், அன்னையின் கருணையுமே காரணம் எனின் மிகையாகாது.

மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மனின் கருணையாலும், அற்புதங்களாலும் இவ்வாலயம், பல்லினத்தவர்களாலும் வணங்கப்படும் ஆலயமாக விளங்குகின்றது. அத்தோடு எதிர்காலச் சந்ததியினருடைய ஆன்மீக முன்னேற்றங் கருதி, பல அறப்பணிகளும் இவ்வாலயத்திலே நடைபெற்று வருகின்றது. மலையகத்திலுள்ள திருத்தலங்களிலே தலைசிறந்த சக்திதலமாக விளங்கும் மாத்தளை ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அருளும், பெருமையும் கொண்ட பழம்பெரும் ஆலயமாக விளங்குகின்றது.

*வளரும்...*



# பெண் மாலிக் காபூர் சசிகலா

மலேசிய மடல்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், அக்.19:

(ஜெயலலிதா மர்ம மரணம் தொடர்பில் தமிழக சட்டமன்றத்தில் நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் அறிக்கை நேற்று தாக்கல் செய்யப்பட்ட சூழலை மையப்படுத்திய செய்தி, இது)

புதுடில்லி மொகலாய சாம்ராஜியத்தில் 13-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் ஒரு தலைமை இடைவெளி ஏற்பட்டது. அப்பொழுதுதான் அடிமையாக இருந்து அரியணை ஏறிய கில்ஜி பரம்பரை உருவானது.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மட்டுமே நீடித்த இந்த கில்ஜி வம்சத்தைத் தோற்றுவித்தவர் ஜலாலுதீன் கில்ஜி. ஆ.்.ப்கானிய-பாரசீக கலப்பினத்தைச் சேர்ந்த இவர்,மொகலாயப் படையில் அடிமையாக இணைந்து, படைத் தளபதியாக உருவானார்.



வஞ்சகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பெயர்பெற்ற டில்லி சுல்தானக கோட்டைக் கொத்தளத்தை சமயம் பார்த்து ஆக்கிரமித்த ஜலாலுதீன், டில்லி சுல்தானாக உருவானபின் நல்ல முறையில்தான் ஆட்சியை நடத்தி வந்தார்.

ஜலாலுதீன் கில்ஜியின் நெருங்கிய உறவினரும் அடுத்த சுல்தான் என அவரால் அடையாளம் காணப்பட்டவருமான அலாவுதீன் கில்ஜி, தன்மீது நம்பிக்கையும் பாசமும் கொண்ட மாமா என்பதைக்க்கூட சிறிதும் கருதாமால் அவசரமாக அரியணை ஏற ஆசைப்பட்டு ஜலாலுதீன் கில்ஜியை வஞ்சகமாக கொன்றுத் தீர்த்தான்.

அப்படிப்பட்ட அலாவுதீன், சுல்தான் ஆவதற்குமுன் குஜராத் மீது படையெடுத்து, பட்டத்து இளவரசனைக் கொன்று அவரின் மனைவி கமலா தேவியை சிறைப்பிடித்து வந்து இஸ்லாத்திற்கு மதம் மாற்றி மணம் புரிந்துகொண்டான். கூடவே, கமலாதேவியின் சேவகியும் சிறைப்பிடிக்கப்-பட்டு, அச்சேவகியையும் மதம் மாற்றி மாலிக் காபூர் என்று பெயரிட்டான், அலாவுதீன்.

மானம், மரியாதை, குலப் பெருமை, நீதி நியாயம், மற்றவர்களின் விமர்சனம் உள்ளிட்ட எதைப்பற்றியும் கவலைப்படாத ஈன குணம் படைத்த மாலிக் காபூர், பெண்ணாகப் பிறந்து ஆணாக உருமாறிய ஒரு திருநம்பி.

அதனால்தான் அவன் ஆற்றிய அந்தரங்க சேவையில் தனி சுகம் கண்ட கமலாதேவி எப்பொழுதும் அவனை கூடவே வைத்திருந்தார். இப்பொழுது, அதே சேவையை ஓர் ஆணான அலாவுதீன் கில்ஜிக்கும் வழங்கியபொது, மாலிக் காபூர் கொஞ்சமும் கூச்சம் கொள்ளவில்லை. ஆனால், அலாவுதீன் கில்ஜியோ இன்ப வெள்ளத்தில்.., இனம்புரியாத புதுவகை உடல் சுகத்தில் திளைத்தான்.

இவை யெல்லாவற்றையும்விட, மாலிக் காபூர் ஈடு இணையற்ற ஒரு போர் மறவன் என்பதையும் சதித் திட்டம் தீட்டுவதிலும் அதை கச்சிதமாக நிறைவேற்றும் மதிநுட்பம் மிக்கவன் என்பதையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

அலாவுதீன் கில்ஜியின் எண்ணவோட்டத்தை அறிந்து, ஜலாலுதீன் கில்ஜியின் தலையை சீவிய திட்டத்தை வகுத்தவன் மாலிக் காபூர். இதே மாலிக் காபூரினால், கட்டாயமாக வாயில் நஞ்சை ஊற்றி கொலை செய்யப்பட்டான் துரோகி அலாவுதீன் கில்ஜி. ஜலாலுதீன் கில்ஜியை அநியாயமாகக் கொன்ற பாவத்தின் சம்பளம் நிறைவாகக் கிடைத்தது அலாவுதீன் கில்ஜிக்கு.

இயற்கை நீதியும் தருமத்தின் வலிமையும் ஒருகாலும் ஓய்ந்ததில்லை. அதனடிப்படையில், மாலிக் காபூர் மட்டும் தப்ப முடியுமா என்ன? பால்வினை நோய் என்னும் அந்த கால எய்ட்ஸ், உடல் முழுதும் வெடிப்பை உண்டாக்கும் வெக்கை நோய், வெங்குட்டம், பார்வை அடியோடு மங்கும் அளவுக்கு தீராத இனிப்பு நீர் நோய் யாவும் ஒருசேர தாக்கி அநாதைப் பிணமாக சரிந்தான் மாலிக் காபூர்.

அவன் தொண்டை வரண்டு தாகத்தினால் துடித்தபொழுது, அருகில் இருந்தவர்கள், தவித்த வாய்க்கு ஒரு ஆழாக்கு தண்ணீர் ஊற்றுவோமே என்றுகூட எண்ணவில்லை. அந்த அளவுக்கு அட்டூழியம் செய்த பாவி மாலிக் காபூர்.

டில்லி கொத்தளத்தில் மாலிக் காபூர் செய்த அட்டூழியங்களைப் போல, இன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்ப, சென்னை போயஸ் தோட்டத்து வேதா இல்லத்தில் செய்து முடித்தவர் பிள்ளை இல்லாதவரும் தஞ்சை தரணியைச் சேர்ந்தவருமான சசிகலா.

சசிகலா உடம்பில் ஓடுவது மொகலாய ரத்தம் என்று "நினைவில் வாழும்" வலம்புரி ஜான் ஒரு முறை குறிப்பிட்டது இங்கே நினைவுகூரத்தக்கது.

கல்வி அறிவு இல்லாத சசிகலா, ஆங்கில மொழியில் பிளந்து கட்டுபவரும் இரும்புப் பெண் என்று வருணிக்கப்பட்டவருமான ஜெயலலிதாவை சமயம் பார்த்து மடக்கி, அவரை சென்னை அப்போலோ மருத்துவமனையில் முடக்கி, சூதிலும் வாதிலும் கைதேர்ந்த மோடி தலைமையிலான மத்திய அரசு, அயல்நாட்டு மருத்துவ மேதை ரிச்சர்ட் பீலே, தமிழக இடைக்கால ஆளுநர் சி.வித்யாசாகர் ராவ், அப்போலோ மருத்துவமனை தலைவர் ஓய்.விசி. ரெட்டி, தமிழக மேநாள் தலைமைச் செயலரும் ஐஏஎஸ் படித்த பார்ப்பன பெண்ணும் நடிகர் எஸ்.வி.சேகரின் கொழுந்தியாளுமான கிரிஜா உள்ளிட்ட அனைவரையும் சமாளித்து காரியம் சாதித்திருக்கிறார்.

தமிழகத்தின் அந்நாளைய அமைச்சர்க் கூட்டத்தை சசிகலா சமாளித்தத்தில் வியப்பேதும் கொள்ளத் தேவையில்லை. அது அத்தனையும் காலிந்து விழுந்து காரியம் சாதிக்கும் அடிமைக் கூட்டம்.

ஜெயலலிதாவின் கூடவே இருந்து கொண்டு, அவருக்கு ஒரு பற்றுக் கோடாகவும் தாங்கும் கம்பமாகவும் விளங்கிய சசிகலாவிற்கு, மாலை-மரியாதைத் பெயர்-புகழ், காவல் துறையினரின் 'Salute' உள்ளிட்ட அத்தனையும் ஜெயலலிதாவுக்கு கிடைக்க, தான் காலமெல்லாம் ஒரு கறிவேப்பிலையாகவே இருக்க வேண்டுமா என்ற எண்ண வெளிப்பாடும் முதல்வர் பதவி மீதான மோகமும்தான் ஜெயலலிதாவின் மர்ம மரணத்தில் முடிந்திருக்கிறது.

நடமாடவே முடியாத நிலையில் முதல்வர் ஜெயலலிதா இருக்க, அவர் இன்னும் ஓரிரு நாட்களில் முழு குணமாகி போயஸ் தோட்ட இல்லத்திற்கு திரும்புவார் என்று அப்போலோ மருத்துவ மனைத் தலைவர் ரெட்டி, சசிகலாவின் ஆணையை ஏற்று பொய்யறிக்கையை ஊடகத்திற்கு வெளியிட்டார்; ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டிருந்த பகுதியைச் சுற்றி பொருத்தப்பட்டிருந்த அனைத்து மறைக-ாணிகளும் நீக்கப்பட்டன.

கடைசியில் ஜெயலலிதா மரணத்தையே சுமார் 30 மணி நேரம் மறைத்து வைத்திருக்கிறார் ஓய்.விசி.ரெட்டி; அடிமை ஓ.பி. பன்னீர் செல்வத்தை முதல்வராக பதவியேற்க வைப்பதற்கான அனைத்து ஏற்பாட்டையும் செய்துமுடித்த பின்புதான் ஜெயலலிதாவின் மரணத்தை அறிவிக்கச் செய்திருக்கிறார் சசிகலா.

எல்லாம் திட்டமிட்டபடி நடந்து முடிந்ததும், தான் முதல்வராக விரும்பிய சசிகலா, அடிமை பன்னீரை அழைத்து, பதவி விலகும்படி கேட்டதும் அதை மறுதலிக்க வக்கற்ற அடிமை பன்னீர், பதவியிலிர்ந்து விலகிவிட்டு, அடுத்த் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் 40 நிமிடம் மௌனம் காத்தார். தர்ம யுத்தம் என்று பிதற்றினார்.

தமிழகத்தில் உள்ள கல்விமான்கள், பல்கலைக்கழக துணைவேந்தர்கள், வர்த்தக பெரும்புள்ளிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அடுத்த முதல்வராக சசிகலா பதவியேற்க இருக்கிறார் என்றெண்ணி பூங்கொத்துகளுடன் வேதா இல்லத்திற்கு படையெத்தனர். மலேசியாவில் இருந்து மலேசிய இந்தியர் காங்கிரசின் அந்நாளைய தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் ச.சுப்பிரமணியம், இந்நாளையத் தலைவர் டான்ஸ்ரீ விக்னேஸ்வரன், துணைத் தலைவர் டத்தோஸ்ரீ மு.சரவணன், டத்தோ த. மோகன் உள்ளிட்டவர்கள்கூட போயஸ் தோட்டத்திற்கு விரைந்து சசிகலாவை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.



Sultan Aala-Ouddine Khildji (1295)

பதவிப் பிரமானம் செய்துவைக்க வேண்டிய இடைக்கால ஆளுநர் காணாமல் போய்விட, சசிகலா மலர்க்கொத்துகளை வாங்கும் நிகழ்ச்சிகள் மட்டும் தொடர்ந்தன. கடைசியில், 7-8 மாதங்களாக தூங்கிக் கொண்டிருந்த தீர்ப்பை தூசி தட்டி எடுத்து, சசிகலாவை பெங்களூரு பார்ப்பன அக்கிரகாரத்து சிறையில் தள்ளினர்.

தனக்கு அடுத்த நிலையிலான தலைவர்களை உருவாக்க மனமில்லாத ஜெயலலிதா, அடிமைகளை மட்டுமே உருவாக்கினார். பணத்திற்கும் பதவிக்கும் காலில் விழுந்து பழக்கப்பட்ட ஒட்டுமொத்த அடிமைகளும் ஜெயலலிதாவின்மீது அக்கறையும் கொள்ளவில்லை. அவர் மரணமுற்றபோது பொருட்படுத்தவும் இல்லை.

ஜெயலலிதாவும் நல்ல ஜெயலலிதா இல்லை் அவரும் துரோகம்-வஞ்சகத்தின் ஒட்டுமொத்த உருவமாகத்தான் இருந்தார்.

எம்ஜிஆர் உடல் நலிவுற்று பேச முடியாத நிலைக்கு ஆளான நிலையில், பிரதமரும் தன் நண்பருமான ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதி, அதில் எம்ஜிஆரால் செயல்படவும் முடியவில்லை; பேசவும் முடியவில்லை; ஊமையான அவரால் தமிழக நிருவாகம் நிலைகுத்தி உள்ளது. அதனால், அவரை முதல்வர் பதவியில் இருந்து அகற்றிவிட்டு தான் முதல்வராக உதவ வேண்டும் என்று கேட்டிருந்தார்.

எம்ஜிஆர் இறந்ததும், நல்ல பெண்ணைப் போல அவரின் தலைமாட்டில் சோகம் ததும்ப நின்றவரும் இதே ஜெயலலிதாதான். அதிமுக-விற்கு தலைவர் ஆனதும் எம்ஜிஆரின் படம் எந்த இடத்திலும் வராமல் பார்த்துக் கொண்டார். அவரின் பெயரை ஒருவரும் உச்சரிக்கா வண்ணம் கவனமாக பார்த்துக் கொண்டார்.

ஆனால், தேர்தல் காலங்களிலும் அவசியமான பிற வேளைகளிலும் இதய தெய்வம் எம்ஜிஆர் என்று சொல்லி, எம்ஜிஆரின் ரசிகர்களை தக்கவைக்க முயன்றார்.

சாந்த குமாரி திருமணமானவர் என்பது தெரிந்திருந்தும் அவரின் கணவர் சோபன் பாபுவுடன் சேர்ந்து வாழ்ந்தவர் ஜெயலலிதா; மணமறிந்து இன்னொரு குடும்பத்தில் கலகம் விளைவித்த ஜெயலலிதா, அதுபற்றி கொஞ்சமும் கூச்சமோ அச்சமோ கொல்லாமல், அதற்கு "நான் ஒன்றும் சீதையோ அல்லது சாவித்திரியோ அல்லள்" என்று விளக்கமும் அளித்தார்.



தேர்தல் நடைபெற்று ஓர் ஆட்சி புதிதாக அமைந்ததும், அந்த ஆட்சி தன் முதல் நிலைநிலை அறிக்கையை அறிவித்தபடி குறித்த நாளில் தாக்கல் செய்யத் தவறினால், அந்த ஆட்சி மேலும் நீடிக்கத் தகுதியில்லை என்பதை சுட்டிக்காட்டி அந்த ஆட்சியை பதிவி நீக்கம் செய்யலாம்.

இந்த சட்டத்தை வகையாக பயன்படுத்திக் கொள்ள விரும்பிய ஜெயலலிதா, 13 ஆண்டுகளுக்குப் பின் 1989-இல் மீண்டும் திமுக ஆட்சி அமைந்ததும், தன்னுடைய முதல் நிலை அறிக்கையை 1989 மார்ச் 25-ஆம் நாள் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதாக கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான அரசு அறிவித்து, அதன்படி கலைஞர் நிதி நிலை அறிக்கையை படித்துக் கொண்டிருந்தபோது, ஜெயலலிதாவால் கொம்பு சீவி விடப்பட்ட செங்கோட்டையன் கலைஞர் கையில் இருந்த நிதி நிலை அறிக்கையைப் பிடுங்கி கிழித்து கீழே வீசியதுடன் பார்வைக் கோளாறு உடைய அவர் அணிந்திந்த கண்ணாடியையும் தட்டிவிட்டார்.

அதன்பிறகு ஆளும் கட்சியினர் எப்படி சும்மா இருப்பார்கள்?. தள்ளுமுள்ளும் அடிதடியும் ஏற்பட்டு, கடைசியில் கலவரத்தில் முடிந்தது.

கடைசியில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவின் சேலையைப் பிடித்து இழுத்தார்கள்; அவரின் முடியைப் பிடித்து இழுத்தார்கள்; எதிர்க்கட்சித் தலைவரான ஒரு பெண்ணுக்கு சட்டமன்றத்திலேயே பாதுகாப்பில்லை என்று தினமலர் உள்ளிட்ட பார்ப்பன ஏடுகள் குதர்க்க செய்தியை வெளியிட்டன. முன்னாள் நடிகை ஜெயலலிதாவும் கறுப்பு ஆடையில் தலைவிரிக் கோலமாக காட்சி அளித்தார்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

(21 பக்கத் தொடர்ச்சி)

# பெண் மாலிக் காபூர் சசிகலா

1996-இல் திமுக ஆட்சி 4-ஆவது முறையாக அமைந்த நேரத்தில், சசிகலாவைவிட்டு ஜெயலலிதா பிரிய வேண்டும் தன் போயஸ் தோட்டத்தில் இருந்து சசிகலாவை ஜெயலலிதா வெளியேற்ற வேண்டும் என்றும் பெருவாரியாக குரல்கள் எழுந்த நேரத்தில், ஜெயலலிதா வைத்த கோரிக்கை வியப்பாக ஆனால் அருவருப்பாக இருந்தது.

தவிர, மாலிக் காபூர்-கமலாதேவி உறவையும் மாலிக் காபூர்-அலாவுதீன் கில்ஜி உறவையும் அது ஒருசேர நினைவுபடுத்தியது.

எம்ஜிஆர் காலத்தில் அதிமுக முக்கிய புள்ளியாக இருந்தவரும் எம்ஜிஆர் இறுதி ஊர்வலத்தின்போது அவரின் உடல் ஏற்றப்பட்டிருந்த வாகனத்தில் ஏற முயன்ற ஜெயலலிதாவை கீழே இறக்கி விட்டவரும் இடையில் திமுக-வில் இணைந்து விவசாய அணி செயலாளராக செயல்பட்ட வேளையில், கலைஞர் மறைவுக்குப் பின் மு.க. அழகிரியுடன் சேர்ந்துகொண்டு தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலுக்கு எதிராக செயல்பட்டுவிட்டு இப்பொழுது பாஜக பிரமுகராக இருப்பவருமான இராமலிங்கம், "இது மகா அசிங்கம்; பெண்கள் சமுதாயத்திற்கே அவமானம்; ஜெயலலிதாவுக்கும் சசிகலாவிற்கும் உள்ள உறவு என்ன உறவு" என்று வினாத் தொடுத்தார்.

ஜெயலலிதா, நாட்டு மக்களிடம் ஊடகத்தின்வழி முன்வைத்த கேள்வி இதுதான்.

நான் சசிகலாவை என் வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும்; வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று அனைவரும் சொல்கிறீர்களே, நீங்கள் எல்லாம் உங்களின் மனைவியை வீட்டைவிட்டு வெளியேற்ற சொன்னால், அவ்வாறு செய்வீர்களா? என்று கேட்டார்.

ஜெயலலிதா எந்த ஆணுக்கும் கட்டுப்பட்டு அடங்கி வாழாதவர். ஆரம்பம் முதலே அப்படித்தான்.

மைசூர் அரண்மனையில் சேவகியாக இருந்த பெண்கள் வரிசையில் தோன்றிய ஜெயலலிதா, சிறு வயதில் தந்தையின் சொல்கேட்டு வளர்ந்தவரில்லை; வாழ்ந்தவரில்லை; திரை உலகில் நுழைந்தபின் ஒருவரை அடையாளம் கண்டு முறையாக காதலித்தோ அல்லது மணம் முடித்தோ வாழ்ந்தவரில்லை; மகன் அல்லது மருமகன் சொல்கேட்டு வாழ்ந்தவரில்லை; பெயரன் போன்ற ஆண் உறவு முறையினருடன்கூட வாழ்ந்தவரில்லை;

விருப்பம்போல வாழ்ந்தவர், பெருந்தலைவர்கள் உட்பட எந்த ஆணையும் அவர் மதித்ததில்லை. கலைஞர், பிரதமர்களாக இருந்த பி.வி.நரசிம்ம ராவ், ஏ.பி.வாஜ்பாய், ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி உட்பட அனைவரையும் கீழ்த்தரமாக விமர்சித்தவர்.

படபிடிப்பு தளங்களில் எவருடனும் பெண் கலைஞர்களிடத்தில்கூட பேசாதவர், எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருப்பார். மக்கள் மன்றமான சட்டமன்றத்திலேயே "நான் பாப்பாத்திதான்" என்று பேசி தன் பிராமண இருமாப்பை பச்சையாக வெளிப்படுத்திய ஜெயலலிதா, தொடர்ந்து ஆண்களை எடுத்தெறிந்து பேசியதால் அவருக்கு இரும்புப் பெண் என்று பிராமண ஊடகங்கள் பெயர் சூட்டி மகிழ்ந்தன.

அரசாங்க பணத்தில் கலைஞர் கட்டியெழுப்பிய புதிய சட்டமன்ற கட்டடத்தை தான் ஆட்சிக்கு வந்ததும் அதை மருத்துவமனை ஆக்கியவர் ஜெயலலிதா; அதைப்போல, அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவாக ஆசியாவிலேயே பெரிய நூலகமாக பார்த்து பார்த்து கலைஞர் கட்டிய நூலகத்தை திருமண மண்டமாக மாற்றி சண்டித்தத்தனத்திற்கு மேல் சண்டித்தனம் புரிந்தவர் ஜெயலலிதா.

தன்னுடைய சொந்த வாழ்க்கை, திரைத்துறை வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் வெளிப்படைத்தன்மை இன்றி மூர்க்கத்தனம், ஆணவம், வஞ்சகம் ஆகியவற்றை வெளிப்படுத்தியவர் ஜெயலலிதா.

இத்தகைய துரோக நடவடிக்கை, ஆணவப் போக்கு என எதிலும் எம்ஜிஆர்கூட சளைத்தவரில்லை.

தமிழ்த் திரைப்படத் துறையில், முதலில் அடியாள் கூட்டத்தில் ஒருவராக சேர்ந்து நடித்த எம்ஜிஆர், பின்னர் நகைச்சுவை நடிகர், அடுத்து வில்லன் பாத்திரம் என்றெல்லாம் நடித்தவர்.

கோடம்பாக்கத்தின் முதல் நட்சத்திர நாயகர் எம்.கே.தியாகராஜ பாகவர் காலத்தில் கும்பல் நடிகராக தொலைவில் நின்று ஏக்கப் பெருமூச்சு விட்டவர் எம்ஜிஆர்.

அவர் நாயகர் நடிகருக்கான வாய்ப்பை எட்டிய நேரத்தில், எம்ஜிஆர் கதாநாயகனுக்கு பொருத்தமில்லாதவராக இருக்கிறார். அவரின் முகவாய்ப் பகுதியில் ஒரு வெட்டு இருக்கிறது. முகவெட்டுத் தோற்றம், பெண்ணைப் போல இருப்பதால், பெண் வேடமிடத்தான் அவர் லாயக்கு என்றெல்லாம் மறுதலித்த நேரத்தில், எம்ஜிஆரை கதாநாயகனாக நடிக்க வைத்தால்தான் மந்திரி குமாரி படத்திற்கு நான் கதை வசனம் எழுதுவேன் என்று முதன் முதலில் அவருக்கு கதாநாயகப் பாத்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர் கலைஞர் மு.கருணாநிதி.

பேரறிஞர் அண்ணா அவரை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கினாலும் கலைஞர்தான் எம்ஜிஆருக்கு கட்சியின் மூன்றாவது பொறுப்பான பொருளாளர் பதவியை வழங்கினார். இது, அண்ணா மறைவிற்குப் பின் நாவலர் நெடுஞ்செழியனை வீழ்த்தி தான் முதல்வர் ஆவதற்கு துணை நின்றார் என்பதற்கான நன்றிக் கடனாகக்கூட இருக்கலாம்.

இந்த உணர்வு கலைஞர் உள்ளத்தில் மிகுதியாக இருந்ததால்தான், எம்ஜிஆர் முரண்டு பிடித்த நேரத்தில் அவரை கட்சியைவிட்டு நீக்க நெடுஞ்செழியன் அவசரம் காட்டியபோதெல்லாம், கலைஞர் நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

1971 பொதுத் தேர்தல் வெற்றிக்குப் பின், சுகாதார அமைச்சர் பதவியை எம்ஜிஆர் கேட்டபொழுது, தாரளமாக சுகாதார அமைச்சராகலாம்; ஆனால், அமைச்சர் பொறுப்பு ஏற்று, அந்தப் பொறுப்பில் தொடரும்வரை நடிக்கக்கூடாதென்று கலைஞர் விதித்த கட்டுப்பாட்டை ஏற்க மறுத்த எம்ஜிஆர், அமைச்சர் பதவியும் வேண்டாமென்று ஒதுங்கி விட்டார்.

இந்தியாவில், முதல் முதலாக ஒரு மாநில கட்சி, காங்கிரஸ் கட்சியை பதவியில் இருந்து அகற்றிவிட்டதே என்ற பேராதங்கத்தில் இருந்த பிரதமர் இந்திரா காந்தி, கலைஞரின் உதவியால் அரசியல் மறுவாழ்வு பெற்றுக் கொண்டே திமுகவை அழிக்க நினைத்தார்.

அந்த வேளையில்தான் அவருக்கு திமுகவைப் பிளக்க எக்ஜிஆர் துருப்புச் சீட்டாகக் கிடைத்தார்.

உலகம் சுற்றும் வாலிபன் படத் தயாரிப்பு தொடர்பில், வெளிநாடுகளில் படப்படிப்பு நடத்திய வகையில் அந்நிய செலாவணி விதியை மீறி இருக்கிறீர்கள். இது குறித்த பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் உலகம் சுற்றும் வாலிபன் படத்தை திரையிட முடியாது என்று காஷ்மீர் படப்படிப்பின்போது, இந்திரா காந்தியின் தூதுவர் குமாரமங்கலம் எம்ஜியாரை மடக்கினார்.

எம்ஜிஆருக்கு, இந்தப் படம் வாழ்நாள் கனவு..

**(தொடரும்...)**

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**



# Tamil Mothers Reject 'Money for Life'; Seek Perpetrators Jailed by ICC Probe

- Siva Parameswaran




War-affected Tamil mothers while rejecting the petty offer of 200,000 LKR per person who are victims of enforced disappearance have questioned the value of human life in Sri Lanka.

Family members searching for their relatives have reacted strongly to the proposal of the war crimes accused government of Sri Lanka's proposal to offer a compensation of a maximum of roughly $550 (five hundred and fifty US dollars) for each Tamil life, which has dismissed as a humiliation and sham.

Continuing their protests for over two thousand days now, the family members say just need to see their relatives and can't be bought for money nor their protests will die down.

Strongly condemning the government's sinister move to pay a paltry compensation as 'Money for life', the Association for Enforced Disappeared (AERD) has questioned if that's the value of human life.

Cabinet spokesperson minister Bandula Gunawardena's statement, 'the cabinet has approved to pay Rupees Two lakhs as compensation for persons identified and confirmed missing by the Office of the Missing Persons (OMP)' has created a furore among those who are seeking to know about their missing kith and kin who were victims of enforced disappearance.



Tamil victims of the brutal civil war and international human rights bodies have called the OMP a sham which has not even found one missing person so far despite compelling strong ample evidence being provided to them AERD claims.

"We are searching for our relatives, not the dead or missing" Maria Suresh Eswary AERD coordinator of the Mullaitivu district told media persons locally.

Thousands of Tamils were handed over, surrendered to, or forcefully taken by the military as the brutal civil war was brought to a blood end by the Sri Lankan Military under the direct command of the war crimes accused former president Gotabaya Rajapaksha.

The vattuvakkal bridge stands a silent witness to the next handover and surrender as the Tamils crossed over to what the government called 'Safe zone' to be never seen again. International agencies including the UN estimate at least 40,000 are unaccounted for till date, while the numbers could be much higher as per local estimates.

Maria Suresh Eswary accuses the government of hoodwinking not only the Tamils but also the global community.

"There was a vote in Geneva. That vote was an eyewash and to hoodwink our people (relatives). It is just to show they have not done any crimes and hoodwinking. Is the value of our lives just 2 lakhs - This is our question? What can we do with those 2 lakhs? They are trying to pay money and make people dead".

In what's considered as one of the longest peaceful protests led by women the AERD has taken to the streets seeking answers who were victims of enforced disappearance, for over 2500 days now.



Seeking an international inquiry to find out the truth and accountability for the heinous crimes perpetrated during the final phase of the war in 2009, AERD says those accused of 'war crimes' should be brought before the International Criminal Court (ICC) to face trial.

"We have been protesting in the eight districts of North and East calling for an international inquiry. We continued to put pressure on the Sri Lankan government by continuously searching for our relatives. But the government never heeded to our demands. That's the reason we are on the streets for over five years now".

Constant attempts by the state to break their protest by intimidation, coercion and sowing seeds of discord among the protestors have miserably failed which has added more strength to the protests and protestors locals say.




Over dozens of mothers who were part of the AERD struggle in spite of the old age, physical and mental fatigues died without knowing what happened to their husbands, sons, brothers and grandchildren.

AERD Mullaitivu coordinator Eswary says they even handed over small children aged from 3 months to one year. Adding further she told media persons they are searching for people who were handed over, abducted in the notorious white vans, those arrested at mid-sea, and now for over 13 years still searching for them. "Their families stand testimony to these".

Speaking to media people she said, the government headed by the war crimes accused former President Gotabaya Rajapaksha unable to counter their continuing protests brought in such a proposal. Adding further Eswary said "he thought if we are weakened, and our protests stop there won't be any issue. The present President too does the same thing, like kicking a ball on the field".

Whilst we are running from pillar to post both locally and internationally seeking justice and answers for those who were handed over or surrendered to the military, the government insensitive to our anguish and agony have brought a cabinet proposal to grant a compensation of two lakhs provided the OMP confirms that a person is missing and issues a certificate to that effect, she added further.

Accusing the government of trying to cover up the Geneva vote, she said "the compensation is just an eye wash and hoodwinking us".

Stressing their protest would continue seeking justice for the victims of enforced disappearance, Eswary wowed they would continue their struggle until the perpetuators of war crimes are stand trial at the ICC. "We will decide what to do next after that".

Refusing the compensation, the AERD Mullaitivu coordinator suggested the government use the funds for their other government purposes. "As victims and witnesses our only stand is those accused should stand trial, found guilty and accept the punishment awarded, and our struggle will continue till that".

Tamil families still searching for their children who went missing during the final phase of the civil war even appealed to the majority Sinhala people seeking their support in finding their beloved ones.

Just before the fateful final week of the war in May 2009, the Sri Lankan army launched a multi-prong brutal assault with scant respect for humans and their lives, called upon the public in the war struck zone to cross over to the 'safer side' (areas controlled by the military) under what they called a 'humanitarian operation' to save their lives.

Thousands fearing for their lives crossed the vattuvakal bridge and surrendered to the military or handed over to them by their relatives with the family members being the only witness apart from that bridge, with a hope that at least their lives would be spared.

And alas that was not to be, and they were never seen again after that. Now a meagre amount of two lakhs has been offered as compensation which seems to be the value of a Tamil life in Sri Lanka. A compensation of five lakhs is being offered if an individual is killed due to Human Elephant conflict in the island nation.

'The value of your life cannot be measured by any amount of money is the worldwide adage' and Sri Lanka has failed to understand this.






# இவ்வார ராசிபலன்

**21-10-2022 வெள்ளி தொடக்கம் 27-10-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** காரியத்தில் வெற்றிக் காணும் வாரம். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் சேரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும். வஸ்திர தானம் செய்தால் வளம் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர்குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகளால் வெகுமானம் உண்டாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். தனவரவு அதிகரிக்கும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்தி வரும். வெளியூர் பயணம் நன்மை தரும். சுயத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**ரிஷபம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பிறருக்கு உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மனைவி வழி அன்பு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன்தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். வீண் செலவுகள் குறையும். விவேகம் வெளிப்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிடைக்கும். உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனோபயம் ஏற்படும். நிர்வாகச் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பதவி உயர்வு கிடைக்கும். கமி'ன் தொழில் லாபம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைப்பேசி செய்தி ஆனந்தம் தரும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅய்யனாரப்ப சுவாமி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** மனநிறைவு கிடைக்கும் வாரம். பூர்வீகச் சொத்து வந்து சேரும். உடல்சோர்வு உண்டாகும். அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். புதுமைகள் நிறைந்த காலம். இயந்திர பணியில் ஆர்வம் கூடும். புதிய நட்பில் எச்சரிக்கைத் தேவை. சொல்லில் கவனம் தேவை. கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டாகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டுக் கிட்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம் உன்னதம் தரும். தாய் வழி உறவு மூலம் லாபம் அதிகரிக்கும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கிடைக்கும். வறுமைகள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: குண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**கடகம்:** விவேகத்தோடு செயல்படும் வாரம். சகோதரியால் லாபம் உண்டு. எதிர்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழைய கடன் வசூலாகும். பணவரவு அதிகரிக்கும். சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் தரும். வறுமைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உணர்வு உண்டு. சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். தேக பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பேச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

**'ராஜயோகம்'**

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. காதல் கைக்கூடும். மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வாயில் தேடி வரன் வரும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கடன் வாங்க நேரிடும். மன நிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். குடும்ப வளர்ச்சி கூடும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பணவரவு அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். பாதகம் விலகும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். வேண்டாத நபர் விலகிடுவர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு மேம்படும். மனக்கசப்பு நீங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். துணிச்சல் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்த்த தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். உற்சாகம் களைகட்டும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரியோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். வறுமைகள் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,6,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**துலாம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். காதலர்களிடையே கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பொறுப்புக்கள் கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். திருப்புமுனை ஏற்படும். வெற்றிகள் குவியும். மதிப்பு உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. விருந்தினர் வருகை ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எண்ணம் வண்ணமயமாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். பொறாமைகள் அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். தாய்வழி உறவில் தகராறுகள் குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசெல்வ நாயகி, அதிர்ஷ்ட எண்: 8,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,F




**விருச்சிகம்:** எண்ணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சுபவிரயம் ஏற்படும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன்தொல்லைகள் தீரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். மாற்றங்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். திருப்திகள் அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமைமிக்க காலமாக அமையும். மாலை நேரத்தில் மகிழ்வான செய்தி வரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். பெண்களுக்கு பெருமை சேரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் கூடும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெற்றோருக்கு பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,8,9,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G

(தொடர்ச்சி 25 பக்கம்)

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். பணியில் கவனம் தேவை. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பெருமைகள் கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாணவர் திறமைகள் பளிச்சிடும். முக்கிய முடிவுகளில் தெளிவு இருக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வீண் செலவுகள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தோதான எண்ணம் உருவாகும். சுறுசுறுப்பு பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணமும், பாராட்டும் சேரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் வேகம் கூடும். கனவுகள் பலிதமாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். பாகப்பிரிவினை ஏற்படும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,N

**மகரம்:** கோரிக்கைகள் நிறைவேறும் வாரம். தர்மச்சிந்தனைகள் மேலோங்கும். வாகன மாற்றம் உண்டு. சகோதர வழியில் சந்தோஷம் கூடும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். தகுதிகள் மிகுதியாகும். உடல்நலம் மேம்படும். சுபச்செய்திகள் வரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். மனக்குழப்பம் வந்து நீங்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசியல் ஆதாயம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்கள் பாராட்டு கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். குடும்ப வளர்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். தொழில் முயற்சி வெற்றி தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தனலாபம் கூடும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,G

**கும்பம்:** நிதி நிலைமை திருப்தி தரும் வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மெத்தனப் போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி உயர்வு வரும். மங்களகரமான செய்தி வரும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழி செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கை கூடும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். உடல் உபாதை நீங்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக் கிட்டும். சாதகமான வாய்ப்பு அமையும். ஊதிய உயர்வு கிட்டும். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,S

**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். காரியங்கள் கை கூடி வரும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். விவேகமான பேச்சுக்களால் வில்லங்கம் விலகும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்பு தும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். எண்ணங்கள் வண்ணமயமாகும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வரவுகள் திருப்தி தரும். ஆபத்துகள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். அன்னிய தேச பயணம் உண்டு. காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 667

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்**

மேலே கொடுக்கப்பட்ட வேதாகம வசனங்களின்படி, ஒரு மனிதன் மரித்தபின் எதையும் அறியவோ, தெரியவோ, கேட்டுச் செயல்படவோ முடியாத நிலையில்தான் இருக்கிறான் என்பதை திட்டவட்டமாக விளக்கிக் காண்பிக்கிறன. அதுவே உண்மையான நிலமையுமாகும். அப்படியிருந்தும் பகுத்தறிவுள்ள மனிதன் மரித்தவரிடம் ஜெபங்களை ஏறெடுத்து, தமக்காக கடவுளிடம் வேண்டுதல் செய்யும்படி விண்ணப்பித்துக் காத்திருப்பது வேதத்திற்கு எதிர்மாறான போதனையும், செயற்பாடுமாய் இருக்கிறது. மேலும் நாமே நேரடியாகக் கடவுளிடம் விண்ணப்பித்து பதில் தரக்கூடிய வழியை கடவுள்தாமே எமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கும்போது, மரித்தவரிடம் ஜெபம் ஏறெடுக்க வேண்டிய அவசியம் எதற்கு? சகலத்தையும் விசாரித்து, நிதானித்து அறிந்து செயற்படுகிற இன்றய விஞ்ஞான உலகில், மரித்தவரை வணங்கும் நிலயை மனித சமுதாயத்தின் அறியாமை என்று சொல்வதற்கில்லை. மாறாக இது சத்துருவான பிசாசின் வஞ்சனையும், அவனுடைய தந்திரத்திற்கு ஆளானவர்களுடைய அடிமைத்தனத்தின் செயற்பாடுமென்றே சோல்லலாம். ஏனெனில், இதைத்தான் பிசாசானவன் கடவுள் மனிதனைப் படைத்த ஆரம்ப நாள்முதல் செய்ய ஆரம்பித்தவன், அதையே தொடர்ந்து சகல மனித சமுதாயத்திலிலும் தொடர்ந்து வித்தியாசம், வித்தியாசமான முறையில் செய்து வருகிறான். எனவே சத்தியத்தை நாம் சரிவர அறிந்தவர்களாய் ஜீவனுள்ள தேவனிடத்தில் எமது தேவைகளைக் குறித்து நேரடியாக ஜெபங்களை ஏறெடுப்போம், "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." என்று வாக்களித்த தேவன், நேரடியாக நமக்குப் பதில்தர ஆயத்தமாய் இருக்கிறார்.

**ஆண்டவராகிய இயேசு சொன்னார்:**

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
**- மத்தேயு 11: 28**

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். **- மாற்கு 11: 22-24**

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். **- யோவான் 14: 13-15**

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.
**- மத்தேயு 18: 19-20**

நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்.
**- யோவான் 14: 18**

**தேவனிடம் நேரடியான ஜெபம்**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். **- யாக்கோபு 1: 5-8**

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.
**- எபிரேயர் 11: 6**

**அன்பானவர்களே!**

மேலே கொடுக்கப்பட்ட வேதவசனங்கள் தேவன் எமது ஜெபங்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் நேரடியாகவே பதில் கொடுப்பார் என்ற வாக்குகளும் வாக்குத்தத்தங்களும் நிறைவாக இருந்தும், அவைகளை அறிந்தும் அறியாதவர்களாய், தெரிந்தும் தெரியாதவர்களாய் நாம் அவற்றிற்கு எதிர்மாறாய் மரித்தவர்களிடத்தில் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் கேட்டுப்போவது எவ்வளவு தவறும் தகாததும் என்பதை இப்போதாவது அறிந்து செயற்படுவோம்.

**தொடரும்...**

# பெரியவரின் பெருமூச்சு

*'என்ன செய்யினம் இஞ்சை*
*மெய்யாவே ஒண்டுமாய் விளங்கேல்ல'*

*பக்கத்தில ஒரு தங்கச்சி பெருங் கோபத்தோட -*
*ஏனெண்டு*
*கேட்கவும் கொஞ்சம் சங்கடந்தான் - ஆனாலும்*

*'ஏன் தங்கச்சி என்னோ பிரச்சினையோ?' -*
*கேட்டபோது*
*'என்னெண்டு செல்லுறது இவையளை*

*காசைத்தான் கறக்கினம் கண்டபடி,*
*வேறை ஒண்டும் நடக்குதில்லை*

*அப்பாவின் தலையைப் பாருங்கோ*
*எப்படி இருக்கெண்டு பாருங்கோ*

*ஓட்டோவில வந்து இறங்கினம்*
*காட்டினார்கள் அந்த கவுண்டறை*

*சீலை கட்டின சிங்காரங்கள்*
*ஏனெண்டும் கேக்கேல்லை கனநேரம்,*

*'அப்பாவுக்கு தலையிடி தாங்கேலாது' - எண்டன்*
*'இப்பவும் இருக்குதோ?' கேட்டார் ஒருவர்*

*'இல்லாட்டி வாறமே' சொல்லத்தான் நினைச்சனான்*
*வில்லங்கம் ஏனெண்டு விட்டுட்டன்*

*தந்தினம் ஒரு துண்டு*
*அங்கேபோய் கட்டுங்கோ எண்டினம்*

*'ஓ பி டி இல காட்டலாமோ?' எண்டன்*
*'ஓ பி டி தேவையில்ல - உங்களுக்கு*

*நரம்பியல் நிபுணர் வைத்தியர் - அவர்*
*இருக்குமிடம் தெரியும் அங்கேபோனால்' எண்டினம்*

*'நரம்பியல் நிபுணர் தலையிடிக்கு?' - மிக*
*வியப்போடு அவவைக் கேட்டேன்*

*'காசைக் கட்டிப்போட்டு துண்டை - அந்த*
*மேசையில காட்டுங்கோ' எண்டினம்*

*கட்டின துண்டைப் பாத்திட்டு*
*பெட்டைகள் இரண்டுபேர் புத்தகமொன்று*

*கொட்டை எழுத்தில பெயர்பொறிச்சுத் தந்து - பின்*
*நீட்டுக்குப் போனால் வைத்தியர் அறையென*

*காட்டிவிட்டுப் போட்டினம் - அங்கு*
*கூட்டமோ அன்று மிக அதிகம்*

*'முப்பத்தாறாம் இலக்கம் எப்ப வரும்*
*இப்பத்தான் இலக்கம் நாலு போகுது'*

*எண்டொரு அண்ணர் சொல்ல*
*'வேண்டாம் இண்டைக்கு காட்டேலாது*

*வா போவம் வீட்டுக்கு' - என*
*கூசாமல் சொன்ன அப்பா*

*'தலை வெடிக்குது' எண்டும் சொல்ல*
*சிலைபோல இருந்திட்டன் - அப்போ*

*தூணோடை நின்ற தம்பி - சக*
*தோழியரைக் கேட்டு கொஞ்சம்*

*முன்னாடி விட்டதனால வைத்தியரை - கொஞ்சம்*
*முன்னுக்கே பாத்தாச்சு - அவர்*

*நரம்பியல் வைத்தியர் தான் - ஆனால்*
*அலம்பாமல் கதைச்சிருந்தார் - அவர்*

*காண்டத்துச் சாத்திரிபோல எல்லாத்தையும்*
*கேட்டுப்போட்டு*

*'கண்டுவிட்டேன் நோய் இதுதான்'*
*எண்டு சொன்னார் - 'ஆனாலும்*

*பரீட்சிக்கப் பலவுமுண்டு புத்தகத்தில் பெயர்களுண்டு*
*பரீட்சித்த பின் மீண்டும் வரவேண்டும்' என்றார்*

*ஒவ்வொரு சோதனைக்கும் ஒவ்வொரு காசு*
*அவ்வப்போது றிசீற்றோடு போகவேணும்*

*கோவிட் சோதனை முதல்*
*இதயச் சோதனை வரை*

*எல்லாத்துக்கும் சல்லடை போட்டுத்*
*நல்லாத் தேடித்தான் கட்டினது*

*தானாகச் சோதிக்க நாலைஞ்சு பெட்டி*
*வீணாகக் கிடக்குது வீட்டில*

*மூவாயிரத்து ஐந்நூறு குடுத்தாச்சு*
*தேவையற்ற கோவிட்டுக்கு ம்...' ஒரு தரம்*
*பெருமூச்சு விட்டபடி - அந்த*

*தங்கச்சி தொடர்கிறார்*

*'இரத்தமும் குடுத்தாச்சு அதோட - வராட்டியும்*
*வரவைச்சு மற்றதையும் குடுத்தாச்சு*

*'ஈ சி ஜீ எடுக்க எந்த இடம்?' - கேட்டதற்கு*
*கூடிநின்று கதைச்ச வெள்ளைச் சட்டை ஒண்டு*

*'இஞ்சை காட்டுங்கோ பொப்பியை'எண்டுதான்*
*சொல்லி*
*'அங்கை நில்லுங்கோ வருவினம்' எண்டது*

*கனநேரம் காவல் நிக்க - பின்*
*ஒருவாறு அழைக்கப்பட்டார் - அப்பா*

*போனவர் உள்ளிருந்து பூம்பனியில் - தலை*
*பூராவும் நனைந்ததுபோல் வெளியில் வந்தார்*

*'தலையில் என்ன!' என்று கேக்க*
*'பிழையான சோதனைக்கு உட்படுத்தப் பாத்தார்கள்*

*நல்ல காலம் சோதிக்க முன்*
*மெள்ளமாகக் கேட்டதனால் விடுபட்டன்' என்று*
*சொன்னார்'*

*'அப்ப என்னதான் நடந்தது? என்று கேட்டதற்கு*

*'ஈ சி ஜீ பரிசோதனைக்கு*
*ஈ ஈ ஜீ செய்யப் பாத்தினமாம்*

*(முன்னையது இதயத்திற்கு*
*பின்னையது மூளைக்கு)*

*அதுதான் கோபம் கோபமாய் வருகிறது' என்றாள்*
*அத் தங்கையவள்*
*அதுவரையில் பேசாமல் இருந்த ஐயா*

*வேதனையிலும்,*

*'கொத்துக் கொத்தாய் வெடிகுண்டுகள்*
*நித்தம் நித்தம் வந்து விழ - தாங்கள்*

*செத்துப் போனாலும் பரவாயில்லை - மக்களை*
*காக்க வேணும் என்று*

*அல்லும் பகலும் சேவை செய்த*
*நல்ல மருத்துவத் தெய்வங்களோடு*

*கடமை உணர்வு கொண்ட*
*கடவுளுக்கும் நிகரான தாதியர் பலரையும்*

*பெற்ற இப்பூமி இப்ப ம்...' என்று*
*விட்டார் ஒரு பெருமூச்சு பெரு நெருப்பாய்.*

*(உண்மை இது கற்பனை அல்ல)*

-- (உமா மோகன் - Montreal- Canada) --


உ
A night of devotional songs!
VANITHASAN PRESENTS
முத்துத் தேடல்
ALBUM
Release
- JOIN US ON -
NOV
SATURDAY 05 AT 5 PM
2022
430 NUGGET AVE, SCARBOROUGH, ON MIS 4A4
[THE ESTATE BANQUET & EVENT CENTRE]
மாவிட்டபுரத்தில் ஊரியவத்தை என்னும் பகுதியில் அமைந்துள்ள காமாட்சி அம்மனின் புனருத்தாரண நிதிக்காக இசைத்தட்டு வெளியீட்டு விழா நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் அனைவரும் சமூகம் தந்து சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.
CONTACT #: (416)-829-2364
All proceedings will be dedicated to the construction of a temple


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


Carefirst Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
✦ நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca

# உதயன் UTHAYAN

உதயம் 1385 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 21, 2022

# கனடா உதயன் சர்வதேச விருது விழா — 2022 வெற்றிகரமாக நடைபெற்று அனைவரையும் கவர்ந்ததாக விளங்கியது











கடந்த 15-10-2022 சனிக்கிழமையன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் ஒன்பது வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன.

ஸ்காபுறோவில் அமைந்துள்ள கென்னடி கொன்வென்சன் விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவில் அரசியல் தலைவர் மதத் தலைவர்கள் வர்த்தகப் பெருமக்கள் மற்றும் கலை இலக்கிய நண்பர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வழங்கப்பெற்ற ஒன்பது விருதுகளைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு

* உதயன் தலைமைத்துவ விருது் பாஸ்டர் எஸ். ஜெயானந்தசோதி அவர்கள்
* உதயன் கலை இலக்கிய மேன்மை விருது: "சிந்தனைப் பூக்கள்" எஸ். பத்மநாதன் அவர்கள்
* உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது (ஒன்றாரியோ) கிருஸ்ணகோபால் செல்லத்துரை அவர்கள்
* உதயன் வர்த்தக வெற்றியாளர் விருது (கியுபெக்): குமரேசன் முத்துக்கிருஸ்ணன் அவர்கள்
* உதயன் இளையோருக்கான அடையாள விருது் மெலனி சுரேஸ்குமார் அவர்கள்
* உதயன் பல்லின உறவுகளுக்கான மேன்மை விருது: மரியா சாரஸ் அவர்கள்
* உதயன் வாழ் நாள் சாதனையாளர் விருது (தமிழ்நாடு) பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் அவர்கள்
* உதயன் வாழ் நாள் சாதனையாளர் விருது (இலங்கை) சிவஸ்ரீ சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள்
* உதயன் சிறப்பு விருது (இலங்கை) நிரோஸ் தியாகராஜா அவர்கள்



ஆகியோர் தங்கள் விருதுகளை மேடையில் மகிழ்ச்சியுடன் பெறுவதையும் அருகில் பல அரசியல் மற்றும் தமிழர் சமூகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் நிற்பதையும் காணலாம். விழா நிகழ்ச்சிகள் வர்த்தகப் பிரமுகர் கென் கிருபா அழகிய முறையில் தொகுத்து வழங்கினார்.

# 'உதயன் சர்வதேச விருது விழா — 2022' இல் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இருவருக்கு மொன்றியால் மாநகரில் அளிக்கப்பெற்ற வரவேற்புபசாரம்

கடந்த 15ம் திகதி சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற ""உதயன் சர்வதேச விருது விழா-2022 "ல் வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இருவருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மொன்றியால் மாநகரில் அளிக்கப்பெற்ற வரவேற்புபசாரம் மற்றும் நூல் வெளியீட்டு வைபவம் ஆகியன சிறப்பாக நடைபெற்றன.

மொன்றியால் திருமுருகன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஆர்வத்துடன் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் மற்றும் இலங்கைக்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் திரு நிரோஸ் தியாகராஜா ஆகியோருக்கே இந்த வரவேற்புபசாரம் வைபவம் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

(உள்ளே விபரமான செய்தியும் படங்களும்)



புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136